Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி
EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...
ஹெப்பி இம்பெக்ஸ்
புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஐ.ஆகிர் 07 (06.08.2003) புதன்கிழமை இதழ்: 307

# அரும்பொருட்கள் பாதுகாப்பு நடுவகம்; தலைவரின் நீண்டகால எதிர்பார்ப்பு!

## அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழ்ச்செல்வன்





(கிளிநொச்சி)

**தேசியத் தலைவரின் நீண்டநாள் எதிர்பார்ப்பைச் செயற்படுத்தும் வகையில், தமிழீழ அரும்பொருட்கள் பாதுகாப்பு நடுவம் அமைகிறது என, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.தமிழீழ அரும்பொருட்கள் பாதுகாப்பு நடுவகம், கிளிநொச்சியில் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் அங்கு மேலும் பேசுகையில் - எங்களுடைய வரலாற்றை, வரலாற்று ஆவணங்களை, வரலாற்றுப் பதிவுகளை, சமகால வரலாற்றைப் பேணிப் பாதுகாக்கின்ற தேசிய அளவிலான - அமைப்பு ரீதியிலான ஒழுங்குபடுத்தலை மாவட்டங்கள் தோறும் செய்ய வேண்டுமென்ற எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பின் அடிப்படையில்தான், நாம் இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

தற்போதுள்ள சூழல் எமக்குச் சாதகமாகவுள்ளது. இந்த நேரத்தில், ஒரு (10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடிச் சந்தியில் புதிய காவலரண்!

கைதடிச் சந்தியில், இராணுவத்தினரின் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திடீரென அமைக்கப்பட்ட இந்த இராணுவக் காவலரணால், மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதேவேளை - இராணுவத்தினர் இப்பகுதியில் இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கைகளிலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தடய பகுப்பாய்வுக்கு நீதிபதி உத்தரவு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைச் செயலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது, மீட்கப்பட்ட தடயப் பொருட்களை - இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு, வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலின் சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் வவுனியா மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## புவிசார் கட்டமைப்பை ஜப்பான் குழு ஆராய்வு!

யாழ்ப்பாணக் குடாநாட்டில், புவிசார் கூட்டமைப்பை ஆராயும் வகையில் அறிஞர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

ஜப்பான் யோக்சிபாசி பல்கலைகழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரோசிக்கோ அஸ்யுவா தலைமையிலான குழு, புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பின்னர் - சட்டம், ஒழுங்கு மற்றும் புவிசார் கட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸார் ஆலோசனை

நல்லூர் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் அதிகமான நகைகளை அணிந்துவருவதைத் தவிர்க்கும்படி, பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

நல்லூர் ஆலயத்திற்கு வருகை தரும் பொதுமக்களினது நகைகள் களவாடப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் நகைகள் அணிந்து வருவதைக் குறைத்தால், களவினை ஓரளவு கட்டுப்படுத்த முடியுமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பல்கலைக்கழக வாகனத்தை மாணவர் தடுத்து நிறுத்தினர்!

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவத்துறை முகாமைத்துவக் கூட்டத்தை, கைதடி சித்த மருத்துவத்துறையிலிருந்து யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து - சித்த மருத்துவத்துறை மாணவர்கள் - பல்கலைக்கழக வாகனத்தை நேற்றுத் தடுத்து நிறுத்தினர்.

இதுபற்றித் தெரியவருவதாவது, சித்த மருத்துவத்துறையை நிறுவனமயமாக்க எடுக்கும் முயற்சிக்கு, மாணவர்கள் தெரிவிக்கும் எதிர்ப்புத் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட பல்கலைக்கழக முகாமைத்துவக் குழுவின் கலந்துரையாடல், கைதடி சித்த மருத்துவத்துறையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களுக்கான கூட்டம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றமையால், முகாமைத்துவக் குழுவினர் - சித்த மருத்துவத்துறைக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. (10 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய இசற் புள்ளியிடல் முறை இந்த வருடம் முதல் அறிமுகம்!

(கொழும்பு)

இந்த வருடத்திலிருந்து, க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு, அவர்கள் பெற்றுக்கொள்கின்ற புள்ளிகளுக்கேற்ப, புதிய 'இசற்' புள்ளியிடல்முறை நடைமுறைப்படுத்தப்பட விருக்கின்றது.

இது தொடர்பான கருத்துக்களை திரட்டுவதற்கு, பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தும் திட்டம் குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

'இசற்' புள்ளிமுறையிலுள்ள முரண்பாடுகளை ஆராய, நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவின் சிபாரிசுகளுக்கேற்ப, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக உயர் கல்வி அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இத்தெரிவுக்குழு - க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் புள்ளி வழங்கும் திட்டத்தை சிபார்சு செய்துள்ளது.

பழைய 'இசற்' புள்ளியின் தெளிவின்மை காரணமாக முரண்பாடுகள் ஏற்பட்டன. இதனை இந்தப் புதிய முறை, நிவர்த்தி செய்யுமென நம்பப்படுகிறது.

இந்தப் புதியமுறை - க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மடு தேவாலயத்துக்கு 4 லட்சம் பக்தர்கள்

மன்னார் - மடுத்தேவாலயத்துக்கு, படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அலயத்துகுச் செல்லும் கத்தோலிக்க யாத்திரிகர்களின் நலன்கருதி, போக்குவரத்துச் சபை, இந்தச் சேவையை நடத்துகிறது.

காலை 6 மணிக்கு திறக்கப்படும் மடு சோதனைச்சாவடி, மாலை 6 மணிக்கு மூடப்படுகின்றது. மடு உற்சவத்தை முன்னிட்டு-விசேடமாக எதிர்வரும் 12 ஆம், (10 ஆம் பக்கம் பார்க்க)

## தினேஷ் தலைமையில் தெரிவுக்குழு

விரைவில் செயற்படவுள்ள தேர்தல் திருத்தங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் தலைவராக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இத்திருத்தம் தொடர்பான பிரேரணையை, இவரே முதலில் தெரிவுக்குழுவுக்குப் பிரேரித்திருந்தார். இப்பிரேரணையை முதலில் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் கரு ஜயசூரியவால் வழிமொழியப்பட்டது. இத்தெரிவை பொதுஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்றுக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

# ஒக்ரோபர் முதல் இலங்கையிலும் கடல் விமானங்கள் சேவையில்!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை, ஒக்ரோபர் மாதம் முதல் பிரதான நீர்த்தேக்கங்களுடன் கடல் விமானசேவைகள் மூலமாக தொடர்புபடுத்த விமானசேவைகள் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

இத்திட்டம் - உள்நாட்டு விமான சேவை விஸ்தரிப்பிற்கான, வசதிகளுள்ள விமான ஓடுதளங்கள் தேவையென்ற குறைபாட்டை நிவர்த்திசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விமானசேவை அதிகாரசபை இயக்குநர் நிமலசிறி, மேற்படி திட்டம் - இலங்கை விமானசேவை நிறுவனங் களினால் ஒக்ரோபரில் ஆரம்பிக்கப்படும் என்று கூறினார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இப்புதிய திட்டம், நாட்டிலுள்ள உல்லாசப் பிரயாணத்துறையின் வளர்ச்சிக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். இதனால், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் தாம் விரும்பும் இடங்களுக்கு கடல் விமானம் மூலம் செல்லமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

# இசற் புள்ளியிடல் முறையால் பாதித்த 16 மாணவர்கள் மருத்துவபீடத்திற்கு!

பல்கலைக்கழக அனுமதிக்கு கடைப்பிடிக்கப்பட்ட 'இசற்' புள்ளி அடிப்படையில் பாதிக்கப்பட்ட 16 மாணவர்களை பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அனுமதிக்குமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இசற் புள்ளியிடல் முறையில் மருத்துவ பீடத்திற்கு தங்களை அனுமதிக்காததால், 16 மாணவர்கள் உயர்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். இதன் பிரதிவாதிகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அமைச்சரவை உட்பட 42 பேருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவைப் பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம், இந்த மாணவர்களைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அனுமதிக்குமாறும், ஏழு மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீதம், நஷ்டஈடு வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

# புதிய விஸா நடைமுறையை சாடுகிறார் மங்கள சமரவீர!

(கொழும்பு)

பிரித்தானியாவின் புதிய விஸா நடைமுறை, இலங்கையின் மனித உரிமைகள்ளை மீறுகின்றது என, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கைவிரல் அடையாளம் பெறுதல என்பது, இலங்கை அரசியல் யாப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்ட மனித உரிமைகளுக்கு எதிரானது எனத் தெரிவித்துள்ள அவர், இந்த விடயம் தொடர்பாக உயர்நீதிமன்றத் தலையீட்டை வலியுறுத்தியுள்ளார்.

இந்த விஸா நடைமுறையை, அரசாங்கம் அனுமதித்தது தொடர்பாக, முறைபாடொன்றை முன்வைதத அவர், எதிராளிகளாக பிரதமமந்திரி, வெளிநாட்டமைச்சர் மற்றும் ஏனைய 35 முக்கியஸ்தர்களை குறிப்பிட்டுள்ளார்.

# நகரில் மீட்கப்பட்ட சடலத்தின் பிரேத பரிசோதனை காலியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடையொன்றின் முன்பாக, நேற்றுமுன்தினம் உயிரிழந்த நபரின உடல், மருத்துவப் பரிசோதனைக்காக, காலி - கராப்பிட்டியவில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் சட்ட வைத்திய அதிகாரி, விடுமுறையில் சென்றிருப்பதாலேயே, இந்தச் சடலம் காலிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்களப்பு - பெரியபோரதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பாப்பிள்ளை என்பவரே மரணமானவராவார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை, நேற்றைய தினம் மேற்கொண்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உடலைப் பிரேத பரிசோதனை செய்யும்படி உத்தரவிட்டிருந்தார்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# நாடாளுமன்றப் பாதுகாப்பு; புதிய சட்டத்துக்கு சிபார்சு!

## பொலிஸ் மா அதிபர் வழங்கினார்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைப் பாதுகாப்ப தற்கான நடைமுறைகள் அடங்கிய ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென, பொலிஸ் மா அதிபர் சிபார்சு செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்துக்குச் செல்லும் போது - உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பதை உள்ளடக்கியதாக, இந்த ஆலோசனைகள் அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் மா அதிபர், இந்த ஆலோசனையை - சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் சமர்ப்பித்திருந்தார்.

சபாநாயகர், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு இவ்விடயத்தைச் சமர்ப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களை உடற்பரிசோதனை செய்வது தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

# கடந்த ஆறு மாதகாலப் பகுதியில் 309 அடிப்படை உரிமை மீறல் வழக்கு

## உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

உயர்நீதிமன்றத்தில் - கடந்த ஆறுமாதகாலப் பகுதியில், அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான 309 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த வருடம்- இதே காலப்பகுதிகளில் தொடரப்பட்ட அடிப்படை மனித உரிமைமீறல் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை - 394 எனவும் தெரியவருகிறது.

இந்த வருடம், இவ்வழக்குகளின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பேரில், கைது நடவடிக்கைகள் குறைவாக இடம்பெற்றமையே காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வரைபடங்கள் இல்லாததால்

# மிதிவெடி அகற்றுவதில் தொடரும் சிக்கல்கள்!

(அரியாலை)

அரியாலைப்பகுதியில் - மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் ஹலோட் ரஸ்ட் நிறுவனத்தினருக்கு, மிதிவெடி புதைக்கப்பட்டுள்ள வரைபடங்கள் இல்லாமையினால், பல சிரமங்களை எதிர்நோக்குகின்றதாக தெரியவந்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு - விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற பாரிய மோதல் சம்பவங்களில் கூடுதலான வெடிபொருட்கள் இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ளன. அததுடன் மிதி வெடி புதைக்கப்பட்டுள்ள வரை படங்கள் கிடைக்கப்பெறாமையினால் உடனடியாக மிதிவெடிகளை அகற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்ற பல காரணங்களினால் - மிதிவெடியகற்றும் பணிகள் அரியாலைப்பகுதியில் முடிவடைய காலதாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைக்காக, அப்பகுதியிலுள்ள மிதிவெடிகளை அகற்றும்படி நீதிவான் கட்டளையிட்டுள்ளார். முன்னுரிமையடிப்படையில் மேற்படி பிரதேச மிதிவெடிகள் தற்போது அகற்றப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

### கசிப்பு வைத்திருந்தவர் பொலிஸாரால் கைது!

கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

திருக்குடும்ப கன்னியர்மட வீதியிலேயே - மேற்படி நபரை மூன்று லீற்றர் கசிப்புடன், பொலிஸார் கைது செய்தனர்.

இவரை, இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நிரந்தர நியமனம், சம்பள உயர்வு கோரும் மனிதஉரிமைமீறல் புகார் விசாரணைக்கு!

நிரந்தர நியமனம் மற்றும் சம்பள உயர்வு என்பன, மேலதிகாரியின் தலையீட்டால் தனக்குக் கிடைக்கவில்லையென - நல்லூர் பிரதேச சபையின் நூல் நிலையத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரால், மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறையீடு தொடர்பான விசாரணை நேற்று நடைபெற்றது.

இவ்விசாரணையில் - நீண்டகாலமாக நூல்நிலையத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர், தனது சேவைகான நியமனத்தை உறுதிப்படுத்தித்தரும்படியும், சம்பள உயர்வு, மேலதிகபடி போன்றன - நல்லூர் பிரதேசசபை செயலாளரினால் கிடைககவில்லையெனவும், இது ஓர் மனித உரிமை மீறல் சம்பவம் எனவும், கடந்த வைகாசி மாதம் முறைபபாடு ஒன்றினை, மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணை - நேற்று மனித உரிமை ஆணைக்குழுவினால் எடுத்துக்கொளளப்பட்டபோது, குறிப்பிட்ட அதிகாரி- அந்த ஊழியருக்கு சம்பள உயர்வு, சேவைக்காலக் கடிதம், மேலதிகப்படி என்பனவற்றை வழங்கத் தான் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

## அமெரிக்கா, கனடா நாடுகளில் இடம்பெற்ற

# பல்வேறு வீதி விபத்துகளில் இலங்கையர் நால்வர் பலி!

இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் - அமெரிக்கா மற்றும் கனடாவில் இடம் பெற்ற வாகன விபத்துக்களில் மரணமாகியுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

கனடாவில் - சாமின் என்ற 18 வயது யுவதி விபத்தில் சிக்கி மரணமாகியுள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது.

ஜூலை மாதம் 14 ஆம் திகதி ரொறன்ரோ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நமசிவாயம் பொன்னம்பலம் (52), அவரது மனைவி மாதவி பொன்னம்பலம் (46) ஆகியோர் மரணமாகியுள்ளனர்.

நமசிவாயம் பொன்னம்பலம் நீர்ப்பாசனத்திணைக்களத்தில் கடமைபுரிபவர், அவரது மனைவி மாதவி பொன்னம்பலம் ரொறன்ரோ வைத்திய சாலையில் தாதியாக கடமைபுரிபவர்.

இதேவேளை - கலிபோர்னியாவில் வாழ்ந்த அசுந்தபெரேரா, லொஸ் ஏஞ்சல்ஸ் நகர வீதியில் இடம்பெற்ற விபத்தில் மரணமாகியுள்ளார்.

மேலும் வாகனத்தில் வெளியே எட்டிப் பார்த்த காஞ்சரு என்பவர், வேகமாக வந்த பஸ் ஒன்றில் மோதுண்டு மரணமாகியுள்ளார். இந்தச் சம்பவம்- நோர்த் யோக் நகரத்தில் இருந்து, ஒட்டாவா நகரத்தில நடைபெற்ற திருமண வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோதே இடம் பெற்றுள்ளது.

### முழுநிலா கருத்தரங்கு

'அகவொளி' நிறுவனம் - நடத்தும முழுநிலா கருத்தரங்கு, எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள 'அகவொளி' நிலையத்தில் நடைபெறும். இக்கருத்தரங்கில் 'கனவும் வாழ்வும்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க.அன்ரன் டயஸ் உரையாற்றுவார்.


## சிறுவிளம்பரம்

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டச்சு புதிய வகுப்புக்கள் 11.08.2003 ஆரம்பமாகின்றன.

தொடர்பு 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (சி-1319)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



ப்ரியமான தோழி

10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன்

(சி-1284)

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் சாருகான், அஜித் நடித்த

சாம்ராட் அசோகா

(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

RED SCORPION

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)

துரித தபால் பொதிகள் சேவை

உள்ளூர், வெளிநாடுகளுக்கான சகல தபால்/பார்சல்கள் எதுவானாலும் உடனுக்குடன் அனுப்புவதற்கு

Sri Murugan

Tele Communication & Agency Post Office

Computer Systems

303, K.K.S Road, Jaffna

T.P - 021- 222 2670

Fax -2223214 e-mail - jel - smskr @ eureka.lk

(சி-1312)

நம்பமுடியவில்லையா....!

பல வர்ணங்களில் இறப்பர் சீல்

★ சிவப்பு, பச்சை, நீலம், ஊதா, கறுப்பு என பல வர்ணங்களில் இறபர் சீல்.

★ மையில் அமர்த்தி, அச்சு அடிக்கத் தேவையில்லை. நேரடியாக அச்சடிக்கலாம்.

★ பல்லாயிரக்கணக்கான தடவைகள் பிரதி எடுக்கலாம்.

★ நீடித்த பல வருடப் பாவனை.

★ உங்கள் எண்ணம் போல் வடிவங்களில் அச்சுப் பெற தரமான, நேர்த்தியான,கவர்ச்சியான இறபர் சீல்கள்.

இப்போது வடபகுதியில் நீங்கள் பெற

யசோ

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 0777110610 (சி-1317)

MEDICAL CHECK UP

வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம் திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

40 வயதிற்கு மேற்பட்ட நோயுள்ள, நோயற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.

X-RAY, ECG சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்!

விபரங்களுக்கு நேரில் போக்குவரத்து வசதி கருதி (சி-1311)

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

DEPARTMENT OF HEALTH SERVICES
TEACHING HOSPITAL, JAFFNA.

CONSTRUCTION OF STAIRCASE OF DRUG STORES AUDITORIUM

1. Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Construction of Staircase of Drug Stores Auditorium will be closed at 10.00 A.m on 23.08.2003.

   Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna up to 16.08.2003 on payment of a non - refundable fee of Rs: 250/=

2. Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

3. Tender Forms will be issued only to Contractors having valid registration in Grade M8 and above in the field of Building Construction under the Institute of Construction Training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka (NCCASL)

4. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna, or deposited in the Tender Box kept at the address appearing below, to receive berfore the closing time.

5. Tender Documents may be inspected free of charge at the Resident Engineer's office, CECB, Teaching Hospital, Jaffna.

6. For further details please contact A.O.G.H. Jaffna.

Dr. S.Sathurmugam.
Chairman,
divisional Tender Board,
Teaching Hospital,
Jaffna.

(சி-1320)

# எங்களினுடைய குருதியின் மீது நாடகமா?

# சிங்கள அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை!

## ராணுவத்தினர் சார்பாக துண்டுப்பிரசுரம் வெளியீடு

(கொழும்பு)

முதுகெலும்பில்லாத சிங்கள அரசியல்வாதிகள், இன்னும் எங்கள் குருதியின் மேல் நாடகம் நடித்துக்கொண்டிருந்தால் - எமது ஆயுதங்களைத் தெற்குக்கு எதிராகத் திரும்புவோம். இவ்வாறு தெரிவிக்கும் துண்டுப்பிரசுரம் ஒன்றை, 'இலங்கை இராணுவ வீரர்களின் குரல்' என்னும் அமைப்பு சகல படை முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

'நாங்கள் இன்னும் என்ன இங்கு செய்துகொண்டிருக்கிறோம்' எனும் தலைப்பில், சிங்கள் மொழியில் அச்சிடப்பட்ட இத்துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாங்கள் யார்? இன்னும் என்ன செய்கின்றோம்? எங்கள் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த திகதியிலிருந்து தமிழினப் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருப்பதை சரித்திரம் கூறுகிறது. ஆனால், அன்றிலிருந்து எமது நாட்டை ஆளும் சிங்கள இனத்தவர், இந்த இனப்பிரச்சினைக்குக் கொடுத்த பரிகாரம் என்ன? அந்த அளவிற்கு புத்திஜீவிகள் எமது ஆட்சியில் இல்லாமல் போனார்கள். அவர்கள் வாய்வழியாகப் பேசியது இனவாதம் ஒன்றைத்தான்.

அன்றிலிருந்து இன்றுவரை இருந்த ஆட்சியாளர்கள் செய்தது - தமிழ் மக்கள், சிங்கள இனத்தினருக்கு எதிராக வைராக்கியத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டது மட்டுமல்லாமல், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கெதிராகவும் மற்றைய கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுக்கெதிராகவும் இனத்துவேஷத்தைத் தூண்டும் கோஷங்களைப் பரப்பியும், மக்களைத் தூண்டிவிட்டும் - அவர்களின் முயற்சிகளை குழிதோண்டியும் புதைத்தனர்.

அதன் பிரதிபலன் - இன்று இனப்பிரச்சினைக்கு எதிரான யுத்தத்தை தமிழ் இளைஞர்கள் ஆரம்பித்து 20 வருடங்களாகின்றன. அன்றிலிருந்து இன்றுவரை அவர்களின் உரிமைகளுக்காக இரத்தம் சிந்தியுள்ளனர்.

அதேபோல், நாமும் அக்காலப் பகுதியில் எமது முதுகெலும்பற்ற ஆட்சியாளர்களின் ஆட்சிபீடங்களைக் காப்பாற்றுவதற்கு, அவர்களின் ஆட்சியை நிரந்தரமாக்குவதற்கு - இரத்தம் சிந்தி எமது இளமைகளைத் தொலைத்துவிட்டோம். தமிழ் இளைஞரானாலும் சரி அல்லது சிங்கள இளைஞரானாலும் சரி - எந்த அப்பாவி இளைஞர்களின் குருதியைப்பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை. அவர்களுக்குத் தேவை - எமது குருதியில் நடந்து நாடகமாடுவதும், சொர்க்க, சுகபோகத்தை அனுபவிப்பதுமேயாகும்.

எமது ஆட்சியாளர்களிடம் இருந்து, அவர்கள் எதிர்பார்த்த உரிமைகள் கிடைக்காததால் - மீளவும் ஒரு யுத்தத்தை ஆரம்பித்து, மீண்டும் குருதியாறு ஓடச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

நாங்கள் இப்போது அவர்களிடம் கூறுகின்றோம், ஆயுதத்தைக் கைவிடுங்கள் - நீங்கள் கேட்பதைத் தருகிறோம் என்று. ஆனால், அவர்கள் கூறுகின்றார்கள், நாங்கள் கேட்பதைத் தாருங்கள் - ஆயுதத்தைக் கைவிடுகிறோம் என்று.

ஆரம்பத்தில் பிழைவிட்டவர்கள் - சிங்களத் தலைவர்கள்தான். ஆகையால், இனி எந்தப் பிரச்சினை சரியானது? முதலாவதாக யுத்தத்தைத் தொடங்கியவர் யார்? என்ற கேல்விகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தாக்கிவிட்டது.

இனியாவது - வன்முறைகள், இனத்துவேஷம், பாதையால் நடமாடும் பாதசாரிகளுக்கு இடையூறு விளைவித்தல், இனத்துவேஷமான நடவடிக்கைகள், பதவியாசை இவைகளை, எதிர்கால எமது குழந்தைச் சமுதாயத்திற்கும் புகட்டி - தங்களுடைய பதவிகளைக் காப்பாற்றிக்கொள்ளவிருக்கும், எமது முதுகெலும்பில்லாத அரசியல்வாதிகளுக்கு, இன்னும் எங்கள் குருதியின் மேல் நாடகம் நடித்துக்கொண்டிருப்பவர்களுக்கு - அவர்களின் பதவிகளைக் காப்பாற்றுதவற்கு துணைபோவதா?

இல்லாவிடின், இவ்வளவு காலமும் வடக்கிற்கெதிராக திரும்பியிருந்த எமது ஆயுதங்களை, தெற்குக்கு எதிராகத் திருப்பி - இப்பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காண்பதா? என்ற ஒரு தீர்மானம் எடுக்கும் நிலைக்கு நாங்கள் வந்திருக்கின்றோம்.

இனியும் - இவர்கள் எம்மைப் பைத்தியக்காரர்கள் ஆக்கினால், எமது ஆயுதங்களைத் தெற்குக்கு எதிராகத் திருப்புவோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம்!

(கொழும்பு)

ரயில்வே ஊழியர் தொழிற்சங்கம் ஒன்று, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளது.

ரயில்வே திணைக்களம் -அதிகாரசபையாக மாற்றப்பட்ட பின்னர், அச்சபையில் ஊழியர்களுக்குப் பாதகம் விளைவிக்கின்ற சில சரத்துக்கள் இருப்பதாகக் கூறியே, இந்தத் தொழிற்சங்கம் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளது.

ஊழியர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் சரத்துகள் மாற்றப்படும் வரை, வேலை நிறுத்தம் தொடரும் என்றும் குறித்த தொழிற்சங்கம் கூறியுள்ளது. (01)

## சர்வதேச மனித உரிமைகளுக்கான குழு இலங்கை வரவுள்ளது

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமை மதங்களுக்கு எதிரான அமைப்பின் குழு ஒன்று - எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி இலங்கை வரவுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக - இங்குள்ள நிலைமைகளை அறிந்துகொள்வதற்காகவே, இந்தக் குழுவினர் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னாபிரிக்கா, கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பாக, ஆராய்ந்து வரும் இந்தக் குழு, அங்கு தமது பணிகள் முடிவடைந்ததும், உடனடியாக இங்கு அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# சுனில் மெண்டிஸ் படுகொலை பிரதான சந்தேகநபர் கைது!

(கொழும்பு)

மேல்மாகாணசபை பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் சுனில் மெண்டிஸ் கொலை தொடர்பாகத் தேடப்பட்டுவந்த பிரதான சந்தேகநபர் ஒருவர், விசேட குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் மகரகமவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

கார் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தபோதே, மேற்படி சந்தேகநபரை தாம் கைது செய்ததாக இன்ஸ்பெக்டர் சந்தன கலப்பதி தெரிவித்தார்.

காரை நிறுத்தும்படி வீதித்தடையில உத்தரவிடப்பட்டதாகவும், அதை மீறிச்சென்ற வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, காரை நிறுத்தியதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். சந்தேகநபர் பயணம் செய்த கார் ஏற்கனவே திருடப்பட்ட ஒன்று எனவும் தெரியவருகிறது.

சந்தேகநபரிடமிருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 9 மி.மீ. பிஸ்டல் மற்றும் 4.5 மி.மீ பிஸ்டல் மற்றும் 17 ரவைகளையும் தாம் கைப்பற்றி இருப்பதாக, பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மாளிகாவத்தையிலுள்ள பாதாள உலகத் தலைவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரை வத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது, விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.



ஜப்பானின் சிறப்புத் தூதுவர்களாக வந்த மூன்று மாணவிகளுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜப்பானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் உரையாடுகின்றனர்.

## ஆசிரியை மீது வல்லுறவு முயற்சி; பாடசாலை அதிபர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

ஆசிரியை ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற பாடசாலை அதிபர் ஒருவரை, குருநாகல் பொலிஸார் கைதுசெய்து நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இவரை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்வத்தின்போது, ஆசிரியை தற்பாதுகாப்புக்காக அதிபர் மீது சுடுநீரைக் கொட்டியதால், அதிபர் பலத்த காயங்களுக்குள்ளானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி ஆசிரியையின் வீட்டுக்குச் சென்ற அதிபர், அங்கு வைத்தே அவருடன் முறைகேடாக நடக்க முயன்றார் என, பொலிஸ் விசாரணைகளிலிருந்தது தெரியவருகின்றது.

# வாக்களிக்க அனுமதிக்காமை குறித்து எட்டுப் பேர் உயர் நீதிமன்றில் வழக்கு!

இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வெளியே வாழ்கின்ற எட்டுப்பேர், உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செயதுள்ளனர்.

வன்னிப் பகுதியில் வசிக்கும் இந்த எட்டுப் பேரும், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் காலத்தில் - தங்களை வாக்களிப்பதற்கு வவுனியாவுக்கு அனுமதிக்கவில்லையென்று குறிப்பிட்டே மேற்படி வழக்கினைத் தாக்கல் செய்துள்ளனர்.

உயர் நீதிமன்றம் இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளை அடுத்த மாதம் 3 ஆம் திகதி நடத்துவதற்கு, எட்டுப் பேருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வழக்குத் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு, 3 நீதியரசர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இதே மாதிரியான வழக்கொன்று, மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் - எதிராளிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளின் தனிப்பட்ட பணத்தில் நட்டஈடு வழங்குமாறு தீர்ப்பளித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# நக்கீரன் கோபால் மீதான வழக்கு; பிணை வழங்க நீதிமன்று மறுப்பு!

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நக்கீரன் கோபாலின் பிணை மனுவை, பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பிரபல பத்திரிகை ஆசிரியரான நக்கீரன் கோபாலை, தமிழக அரசு கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி கைதுசெய்தது. சட்ட விரோதமாகத் துப்பாக்கி வைத்திருந்ததாகக் கூறி, அவரைக் கைது செய்த பொலிஸார், அவர் மீது பயங்கரவாதத் தடைச் சடடத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

நான்கு மாத காலமாக சிறையிலுள்ள நக்கீரன் கோபால், தம்மீதான வழக்கை விசாரித்துவரும் பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் பிணை கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவை விசாரித்த நீதிபதி பிணை வழங்க மறுத்துவிட்டார்.

கோபாலை பிணையில் விடுதலை செய்தால், சாட்சிகள் கலைக்கப்படலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மனுவைத் தள்ளுபடி செய்வதாக நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே உரிய பிடி ஆணையின்றிக் கோபாலை, கடந்த வாரம் சென்னை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த குற்றத்திற்காக இரு பொலிஸார் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் போராட்டம்

சமுர்த்தி உத்தியோகத்தர் அனைவரும் நாடளாவிய ரீதியில் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

சம்பள உயர்வு கோரியும், சமுர்த்தி திட்டங்களின் மூலம் பயன் பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இப்போராட்டம் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள இப்போராடடத்தில் - சமுர்ததி அபிவிருத்தி அலுவலர்கள் அடங்கிய 24 ஆயிரம் பேரும், 9 ஆயிரத்து ஐந்நூறு விவசாய மேம்பாட்டு உத்தியோகத்தர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சுருக்கு வலை மீன்பிடித்தலுக்கு எதிர்ப்பு; திருகோணமலையில் இன்று ஊர்வலம்!

## மூவின மக்களும் பங்கேற்பர்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில்- சுருக்குவலை மீன்பிடித் தொழிலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மூவின மக்களும் இணைந்து - எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை இன்று நடத்தவுள்ளனர்.

இன்று காலை திருகோணமலை வீரநகர் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தைச் சென்றடைந்து, அங்கு திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

திருகோணமலை தமிழ் மீனவர் ஒன்றியமும், கடற்தொழில் சங்கங்களும் இணைந்து, இந்த ஊர்வலத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக சுருக்கு வலை மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவோரின் எண்ணிக்கை அதிகரிததுவருவதால், பெருமளவான சிறிய மீன்கள் சுருக்குவலைகளில் அகப்பட்டு விரயமாவதால், மீனினங்களின் பெருக்கம் பாதிப்படையும் என்பதாலேயே - இதனைக் கட்டுப்படுத்தக் கோரியும், இந்தத் தொழிலுக்கு எதிர்ப்புத்தெரிவித்துமே ஊர்வலம் நடத்துவதற்கு மூவின மக்களும் முன்வந்துள்ளனர்.

இதேவேளை - சுருக்குவலையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு, அவர்களுடைய தொழில் உபகரணங்களின் பெறுமதியின் இரண்டு மடங்கு குற்றப்பணமாக அறவீடு செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4,10)

# புலிகளின் பெரும்பான்மைப் பங்களிப்புடன்

# இடைக்கால நிர்வாகம் ஏற்பட வேண்டும்!

## பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஜப்பானிய அமைச்சருக்கு மகஜர்

மீள்குடியமர்வையும், புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்தையும் அமுல்செய்ய நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் அவசியமாகும். இதில் மிக முக்கியமானது, நீண்டகாலமாகத் துன்பப்படும் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படுத்துதலாகும். தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான-தமிழீழ விடுதலைப் புலிகளின் பெரும்பான்மைப் பங்களிப்புடன்கூடிய, இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை வடக்கு - கிழக்கு மக்களுக்காக ஏற்படுத்துதல், நிரந்தர சமாதானத்துக்கு மிகவும் அவசியமானதாகும் என, பல்கலைக்கழக ஊழியர் சங்கம் - யாழ். வந்த ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சருக்குச் சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினராகிய நாம், யாழ்ப்பாண மாவட்டத்தில், வாழும் தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் சில விடயங்களைத் தங்கள் முன்வைக்க விரும்புகிறோம். யாழ்.மாவட்டத்தின் 30 வீத நிலப்பரப்பு, இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ்மக்களின் மரபு வழித் தாயகப் பிரதேசமாகும். இப்பிரதேசமானது தற்போது, உயர்பாதுகாப்பு வலயமென இராணுவத்தினரால் பெயரிடப்படடுள்ளது. இப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் - தமது உடைமைகள், விவசாய நிலங்கள், கடற்தொழில் வளங்கள், பாடசாலைகள், வழிபாட்டிடங்களுடன், தமது குடியிருப்புக்களையும் இழந்து பிறரது இல்லங்களிலும், நலன்புரி நிலையங்களிலும் அடைக்கலம் தேடியுள்ளனர்.

கரையோரங்களில் வாழும் கடற்தொழிலாளர்கள் தமக்கு விதிக்கப்பட்ட கடுமையான விதிமுறைகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அனுமதி அட்டை முறை, நேரக்கட்டுப்பாடு, படகுகளையும், கடற்தொழில் உபகரணங்களையும் சோதனையிடும் நடைமுறை எனப் பல்வேறு விதிமுறைகளை இராணுவத்தினர் இத்தொழிலாளர்கள்மீது திணித்துள்ளனர்.

நிரந்தர, நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், ஜப்பானிய அரசாங்கம் காட்டிவரும் அக்கறையையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். ஜப்பானிய அரசாங்கத்தில் உயர்நிலையிலுள்ள அமைச்சர் என்ற வகையில், மேற்கண்ட உண்மைகள் தங்கள் தயவான கவனத்தைப் பெறுமென நம்புகின்றோம். இவ்வாறு - இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பகுதிநேர ஆங்கில ஆசியர்கள்

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி

# பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு முஸ்தீபு!

யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்த நியமனம் வழங்கக்கோரி, மூன்றாம் தவணை ஆரம்பம் முதல் வகுப்புக்களைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ். உயர் கல்வி நிலையத்தில் நடைபெற்ற- யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துக் கல்வி வலயப் பாடசாலைகளிலும் கல்வி கற்பிக்கின்ற பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் இயங்கிவரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கங்களுடன் இணைந்து செயற்படுதல்.

விரைவில் அமைக்கப்படவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கங்களின் இணையத்துடன் இணைந்து செயற்படுதல்.

நிரந்தர நியமனம் பெற்ற ஆங்கில ஆசியர்கள் போன்று, அர்ப்பணிப்புடன் பணியாற்றிவரும் தமக்கு - நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலத்திற்கு 80 ரூபா மட்டுமே வேதனம் வழங்கப்பட்டு வருகின்றது.

நிரந்தர நியமனம் வழங்கிவருவதாகத் தெரிவித்து, 2000 ஆம் ஆண்டு யாழ். வலயத்தில் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு, தகுதி காண்பட்டியல் தயாரிக்கப்பட்ட போதும், எவருக்கும் நிரந்த நியமனம் வழங்கப்படவில்லை. இதனால், விரக்தியடைந்த தாம், இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மூன்றாம் தவணையிலிருந்து நிரந்தர நியமனம் வழங்கும்வரை வகுப்புகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நடைபெறும் இந்தப்போராட்டத்திற்கு, யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ் . மாவட்ட நிர்வாகத் தெரிவு

தேசிய எழுச்சிப் பேரவையின் - யாழ்.மாவட்ட நீர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமை வகித்தார். வடமராட்சி கோட்டப்பொறுப்பாளர் தயா, வலிகாமக்கோட்டப் பொறுப்பாளர் றொபின், தொழிற்சங்கங்களின் பொறுப்பாளர் இமையவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கோட்ட ரீதியாக 30 உறுப்பினர்கள் நேற்றைய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட செயலாளரான சொலமன் சூ.சிறில் தெரிவு செய்யப்பட்டார்.

# கராத்தே சங்கங்களை இணைத்து மாவட்ட ரீதியில் கழகம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கராத்தே பயிலும் ஆசிரியர், மாணவர்களுக்கான கலந்துரையாடல், கடந்த ஞாயிற்றுக் கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறப்புரைகளை - யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்தினார்.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு, புதிய நிர்வாகத்தின் நடைமுறைப்படி யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கராத்தே சங்கங்களும் - கராத்தே கழக சங்கத்தினுள் பதிவு செய்யப்படவேண்டும் எனவும், பதிவு செய்யாமல் நடாத்தப்படும் கராத்தே கழகங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி புதிய நிர்வாகத்தைச் சந்தித்து, சங்கத்தில் இணையவேண்டும் எனவும், புதிய நிர்வாகத்தில் புதிய முடிவுகள் எடுக்கப்பட்டன. இவற்றைவிட, மேலும் பல முக்கிய முடிவுகளும் இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்டன.

### ஆங்கில நாடகப் போட்டி பொறுப்பாசிரியர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

"ஆரம்பப்பிரிவு ஆங்கில நாடகப் போட்டியில் பங்குபற்றும் யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கு, யாழ். வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளருடனான சந்திப்பு, நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் என, யாழ். கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(அராலி)

வட்டுக்கோட்டை கார்த்திகேயா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் இன்று பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் பிரதமவிருந்தினராகவும், ஐ.என்.எஸ் நிறுவன இயக்குநர் பொன்மலர் இராஜேஸ்வரன், வைத்திய கலாநிதிகளான - காந்தநேசன், றதினி காந்தநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (118)

### ஆலய பரிபாலன சபைகளின் ஒன்றியம் அமைப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குள்ள இந்து ஆலயங்களின் பரிபாலன சபை அங்கத்தவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, ஆலய பரிபாலன சபைகளின் ஒன்றியத்தை அமைத்துள்ளனர்.

சமூக நலச் செயற்பாடுகளுக்கான பொறுப்புடன் இயங்கவேண்டும் என்ற இலக்குடன், இந்த ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது.

### போயா தின ஆன்மீக நிகழ்வு

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் போயாதின ஆன்மீக நிகழ்வுகள் - எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : நி.கனிஸ்ரன்
முகவரி: 222, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.

முதலாவது அகவையில்

பெயர் : சி.புவியரசன்
முகவரி: இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.



முதலாவது அகவையில்



பெயர் : கு.கஜீபன்
முகவரி: கைலயங்கிரி வங்களா வீதி, மீசாலை.

மூன்றாவது அகவையில்

பெயர் : பொ.நிதுஷா
முகவரி: தெக்கிலி வீதி, நவிண்டில், கரவெட்டி.



எட்டாவது அகவையில்



பெயர் : ர.யசிந்தா
முகவரி: நாவலடி வீதி, திருநெல்வேலி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------


முகவரி :------------------------

பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

21.





i) PS இன் நீளம் யாது?

ii) △PQS இன் பரப்பளவு யாது?

iii) △SQR இன் சுற்றளவைக் காண்க. (ஓர் கோவையாகத் தருக)

22.





i) இணை PQRS, இணை PLMS இன் பரப்பளவுகள் சமனாவதற்கான காரணம் யாது?


ii) △MSR = △PQL எனக் காட்டுக.

23. i) கீழுள்ள சரிவகத்தின் பரப்பளவு யாது?

ii) அதனைப் பயன்படுத்தி இரு சமாந்தரக் கோடுகளுக்கும் இடைப்பட்ட தூரம் h ஐக் காண்க.





24.




உருவில் உள்ள தரவுகளுக்கமைய
i) xy இன் நீளத்தைக் காண்க.
ii) கோணம் a யின் பருமனைக் காண்க.


25. ரூபா 10 பங்குகளில் 100 பங்குகளான ரூபா 1200 இற்குக் கொள்வனவு செய்த ஒருவர், ஒரு ஆண்டின் இறுதியில் ரூபா 150 ஐ இலாபமாகப் பெற்றார்.
i. அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
ii. பங்கு இலாப வீதத்தைக் காண்க.
iii. சதவீத இலாபத்தை முதலீடு சார்பாகத் துணிக.

26. A,B என்பன மூட்டற்ற தொடைகளாகும்போது (AuB)' ஐ கீழுள்ள வென்னுருவில் குறிக்க.




i. n(AuB) ஐ எவ்வாறு காணலாம்?
ii. n(A) + n (A') இன் பெறுமானம் யாது?

27.




AB = 2 AC ஆயின் Sinθ, Cosθ, Tanθ என்பவற்றைக் காண்க.

28. ரூபா 60,000 ஆண்டுப் பெறுமானம் உடைய வீடு ஒன்றிற்கு ஆண்டு வரியாக ரூபா 1,200 அறவிடப்பட்டது.
(i) காலாண்டு வரியைக் காண்க.
(ii) வட்டி அறவிடப்பட்ட சதவீதம் யாது?

29. lg 2.72 = x ஆயின்,
i) lg 2.72 இன் பெறுமானம் யாது?
ii) lg 0.00272 இன் பெறுமானம் யாது?
iii) lg 27200 இன் பெறுமானம் யாது?

30. LM என்பது ஓர் நிலையான கோடு. A என்பவர் L இல் இருந்து ஆரம்பித்து LM உடன் 40° ஐ அமைக்கும் கோணத்தில் நடந்து செல்கிறார். B என்பவர் L இலிருந்தும் M இலிருந்தும் எப்பொழுதும் சமதூரத்தில் உள்ளவாறு நடந்து கொண்டிருக்கிறார். C என்பவர் B இலிருந்து எப்பொழுதும் 3m தூரத்தில் நடந்து செல்கிறார். பருமட்டி படம் வரைந்து இம் மூன்று ஒழுக்குகளும் சந்திக்கும் புள்ளியைக் குறித்துக் காட்டுக.

(தொடரும்)

**கு.சிறீகணேஷ்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

இங்கே மடிக்கவும்



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை


## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்




**மாணவர் மலர்**

1. ஓவியர் ஒருவர் வரைந்த படத்திலுள்ள சில அம்சங்கள், அவரது மாணவ ஓவியன் வரைந்த படத்தில் பிழையாகக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய பிழையான இடங்கள் 7ஐ, மாணவ ஓவியர் வரைந்த சித்திரத்தில் கண்டுபிடித்து அவற்றைச் சுற்றி வட்டமிடுக.

ஓவியர் வரைந்த படம்



மாணவ ஓவியன் வரைந்த படம்.




2. ஐந்து விளையாட்டுக்களில் விருப்பமுள்ள பிள்ளைகளின் விபரம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| | விளையாட்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | ஓடுதல் | கரப்பந்தாட்டம் | எல்லே | சடுகுடு | பாய்தல் |
| பிள்ளைகள் தொகை | 7 | 9 | 7 | 8 | 12 |

ஐந்து விளையாட்டுக்களிலும் விருப்பமுள்ள மாணவர்களின் மொத்தத் தொகை யாது?

1) 41  2) 43  3) 65  4) 46


3. கீழே தரப்பட்டுள்ள நிழல் உருவுக்குப் பொருத்தமான கோட்டுருவை A,B,C,D,E,F,G ஆகிய உருக்களில் இருந்து தெரிவுசெய்து, அவ்வுருவைச் சுற்றி வட்டமிடுக.




4. ஏப்ரல் 3 ஆம் திகதி புதன்கிழமையாயின், ஏப்ரல் 11 ஆம் திகதி என்ன கிழமை?
1. செவ்வாய்க்கிழமை  2. புதன்கிழமை
3. வியாழக்கிழமை  4. வெள்ளிக்கிழமை

5. வகுப்பிலுள்ள மாணவர் தொகை 36 பேர் ஆவர். அவர்களுள் 8 பேர் விலகிச் சென்றனர். மிகுதியாய் உள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் செயல்முறை பின்வருவனவற்றுள் எது?
1) 36 - 8  2) 36 + 8
3) 8 x 36  4) 36 ÷ 8

6.




மேலே உள்ள உருக்களில் செங்கோணங்கள் நான்கினைக் காட்டும் உரு எது?
1) A  2) B  3) C  4) D

7. பின்வரும் பகுதியை வாசித்து, அதன் கீழுள்ள படிவத்தை நிரப்புக.

சுதாகரன் என்னும் சிறுவன் 15, கடற்கரை வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியிலுள்ள வீட்டில் வசித்து வருகின்றான். அவனது தந்தை பாலசிங்கம். சிறியகடை ஒன்றை வைத்திருக்கிறார். சிறுவன் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கின்றான். அவனது வயது 9 வருடம் நான்கு மாதங்களாகும்.

படிவத்தைப் பூர்த்தி செய்க.

| | |
|---|---|
| சிறுவனின் முழுப்பெயர் | ...................... |
| சிறுவனின் வயது | ...................... |
| கற்கும் தரம் | ...................... |
| தந்தையின் பெயர் | ...................... |
| தந்தையின் தொழில் | ...................... |

8. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

மாணவனொருவன் உலர்ந்த ஜாம் போத்தல் ஒன்றில் (மூடப்படாத) சிறிதளவு கடுகு விதைகளை இட்டு, சில நாட்கள அவதானித்தான். வித்துக்கள் எதுவுமே முளைக்கவில்லை. வித்துக்கள் முளைக்காமைக்கான காரணம் எதுவெனக் கீழே தரப்பட்டுள்ள நான்கு காரணங்களுள் சரியான காரணத்தைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. சூரிய ஒளி கிடைக்காமை.
2. போதியளவு நீர் கிடைக்காமை.
3. உயிருள்ள வித்துக்கள் இடப்படாமை.
4. சரியாக அவதானிக்காமை.

9. செழிப்பான நாற்றுக்களைப் பெறக்கூடிய வித்துக்களைத் தேர்ந்தெடுக்கும்போது, கவனிக்கவேண்டிய மூன்று இயல்புகளைக் கீழே தரப்பட்டுள்ளவற்றில் இருந்து தெரிவுசெய்து, புள்ளிக் கோடுகளில் எழுதுக.

✦ மேற்றோல் மேடு பள்ளமின்றி மினுமினுப்பாக அமைந்திருத்தல்.
✦ வித்துக்கள் மிகவும் கறுப்பாக இருத்தல்.
✦ காயங்களின்றி இருத்தல்.
✦ உள்ளீடு நிரம்பித் திரண்ட நிலையில் இருத்தல்.
✦ வித்துக்கள் சுவையுள்ளதாக இருத்தல்.

1. ......................................................

2. ......................................................

3. ......................................................

10. "வீதியை - மஞ்சள் கோட்டுப் பகுதியால் கடக்க முயற்சித்த போது..." என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. ......................................................
2. ......................................................
3. ......................................................
4. ......................................................
5. ......................................................
6. ......................................................

(தொடரும்)

## பெற்றோர்களின் கவனத்திற்கு...!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. (பாடத்திட்டத்திற்கு உட்பட்டு அமையும்) வினாக்கள் தயாரிக்கும் போது - மாணவர்களின் வயது, அறிவு, திறன், மனப்பாங்கு என்பன கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நிதானமாகச் சிந்தித்து, அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கமைய மாணவர்கள் செயற்படும்போது, இப்பரீட்சை கடினமானதாக அமையாது.

மாணவர்களை வற்புறுத்தி விருப்பின்றிக் கற்பிக்கின்றபோது - மாணவர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடிய அபாயமும் இருப்பதாகக் கல்வியாளர்கள் எச்சரிக்கின்றார்கள். பிள்ளைகளுக்கு வயதுக்கு மீறிய வினாக்கள் வழங்குவதையும், அவர்கள் மீது சுமக்க முடியாத கல்விச்சுமைகளை ஏற்றுவதையும் தவிர்க்கவும். இன்றேல்.....!

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

## வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் சமூக சேவை உத்தியோகஸ்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், சனசமூகஅபிவிருத்தி உத்தியோகஸ்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை

2003-05-28 தொடக்கம் 2000-07-16 வரை மேற்படி போட்டிப் பரீட்சைக்கென வெளியான பொது உளச்சார்பிற்கான விடைக்குறிப்புகள். மேலதிக விளக்கங்களும் விளக்கங்களும் உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும். பொது அறிவு விடயங்கள் தொடர்ந்து பிரசுரமாகும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) 1 | (2) 2 | (3) 3 | (4) 1 | (5) 3 | (6) 4 | (7) 3 | (8) 4 |
| (9) 3 | (10) 2 | (11) 3 | (12) 4 | (13) 4 | (14) 2 | (15) 5 | (16) 3 |
| (17) 3 | (18) 3 | (19) 1 | (20) 1 | (21) 4 | (22) 2 → 119 / 7 A / 4 | (23) 4 | (24) 4 |
| (25) 1 | (26) 1 | (27) 4 | (28) 2 | (29) 2 | (30) 1 | (31) 4 | (32) 3 |
| (33) 3 | (34) 2 | (35) 3 | (36) 3 | (37) 5 | (38) 1 | (39) 1 | (40) 4 |
| (41) 2 | (42) 4 | (43) 4 | (44) 5 | (45) 3 | (46) 3 | (47) 2 | (48) 4 |
| (49) 1 | (50) 2 | | | | | | |

P. உமாசங்கர்
ஆசிரியர்,
பொது அறிவு - நுண்ணறிவுத்துறை.

இங்கே மடிக்கவும்



# க.பொ.த [சாதாரண] மாணவர்களுக்கான வழிகாட்டற்தொடர்

## கணிதம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. சுருக்குக. $6\sqrt{3} - \sqrt{27}$

2. $y = 3x + 1$ இற்கு சமாந்தரமாக உற்பத்தியினூடு செல்லும் நேர் கோட்டின் சமன்பாடு யாது?

3. $2x - 1 = 5$ இன் தீர்வாக அமையக் கூடியது, பின்வருவனவற்றுள் எது எனக் கண்டு அதன் கீழ் கோடிடுக.
அ) $x = 2$ ஆ) $x = -3$ இ) $x = 3$

4. ஏன் பரம்பல் ஒன்றின் முதலாம் காலணை 13 உம், இரண்டாம் காலணை 19.5 உம், மூன்றாம் காலணை 32.5 உம் ஆகும். காலணை இடைவீச்சு பின்வருவனவற்றுள் எது?
அ) 6.5 ஆ) 19.5 இ) 13


5. பரீட்சை ஒன்றில் ஒருவர் சித்தியடைவதற்கான நிகழ்தகவு 65% ஆகுமென அவரது பாட ஆசிரியர் கணித்தார். அவர் சித்தியடையத் தவறுவதற்கான நிகழ்தகவு யாதாக இருக்கும்?

6. 3, -2 என்பவற்றை மூலகங்களாகவுடைய இருபடிச் சமன்பாட்டை எழுதுக.


7. $1.001 + 1.01 + 1.1$ இன் பெறுமானம் யாது?

8. $x + 30^0$ இன் மிகை நிரப்புக் கோணம் யாது?

9. a இன் பெறுமானம் யாது?





10. y இன் பெறுமானத்தைக் காண்க.




11. A = "AFRICA என்னும் சொல்லிலுள்ள உயிர் எழுத்துக்கள்"
அ) தொடை A ஐ எழுதுக.
ஆ) A இற்கு அமையக்கூடிய தொடைப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?

12. கம்பி ஒன்றினால் ஆக்கப்பட்ட சதுரப் படல் ஒன்றின் சுற்றளவு 36cm ஆகும்.
i) அதன் பரப்பளவைக் காண்க.
ii) இக்கம்பி நீட்டப்பட்டு ஒரு சமபக்க முக்கோணி வடிவப் படல் ஆக்கப்பட்டால், அதன் ஒரு பக்க நீளத்தைக் காண்க.

13. $\triangle ABD$ பரப்பளவு $12cm^2$ உம் $BD = 4cm$, $DC = 5cm$ உம் ஆயின் $\triangle ABC$ இன் பரப்பளவைக் காண்க. (காரணம் குறிப்பிடவும்)





14. காரணிப்படுத்துக $5x^3 - 135$

15 சுருக்குக. $2\frac{1}{3} \div \left(1\frac{4}{5} - \frac{2}{3}\right)$

16. $y = x^2 + 5x + 1$ என்ற இருபடிச் சார்பின் வரைபினது திரும்பற்புள்ளியின் ஆள்கூறையும், சமச்சீர் அச்சின் சமன்பாட்டையும் தருக.


17. $x = a\sqrt{(p/q)}$ என்னும் சூத்திரத்தில் p ஐ எழுவாயாக்குக.

18. O வட்ட மையம். AP, AQ தொடலிகள். $P\hat{O}Q = 130^0$ ஆயின் x,y இன் பெறுமானங்களைக் காண்க.




19. 1: 50,000 என்ற ஏகபரிமாண அளவிடையில் வரையப்பட்ட அளவிடைப் படம் ஒன்றில்,
i) 7cm குறிக்கும் உண்மையான நீளம் யாது?
ii) $6cm^2$ குறிக்கும் உண்மையான பரப்பளவு யாது? ($km^2$ இல் தருக)

20. கீழுள்ள இரு முக்கோணிகளும் ஒருங்கிசையுமா? காரணம் தருக.



நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு*
*அல்லவை செய்துஒழுகும் வேந்து*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## நீண்டகாலக் கைதிகளா?

களுத்துறைச் சிறைச்சாலை என்றாலே - தமிழ் அரசியற் கைதிகள், உண்ணாவிரதப்போராட்டம் போன்ற சொற்கள்தான் நினைவுக்கு வருகின்றன. வெலிக்கடைச் சிறை என்றால், 1983 ஆம் ஆண்டுப் படுகொலைகள் எப்படி நினைவுக்கு வருமோ, அதுபோன்றே களுத்துறைச் சிறைக்கு இப்படியொரு மனப்பதிவு, மக்களிடத்தே ஏற்பட்டிருக்கிறது.

இந்தவகையில் - மீண்டும் களுத்துறைச் சிறைச்சாலையில் ஒரு உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. சிறையின் கூரை மீது ஏறித் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதி ஒருவர் ஆரம்பித்துள்ளார்.

தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் துரிதப்படுத்துமாறும், தன்னை விடுதலை செய்யுமாறும் கோரியே, இவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

களுத்துறைச் சிறையில் -இத்தகைய போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதென்பது, இதுதான் முதல் முறை என்று இல்லை. எத்தனையோ உண்ணாவிரதப் போராட்டங்கள், இதுவரை நடத்தப்பட்டுவிட்டன.

தமிழ் அரசியல் கைதிகள் - தம்மை விடுவிக்கக்கோரி, அல்லது தம்மீதான வழக்குகளை துரிதமாக விசாரிக்கக் கோரி, போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றனர்.

இத்தகைய போராட்டங்கள் - பலமுறை வாரக்கணக்கில் கூட நீடித்திருக்கிறது. கைதிகள் உடல்நிலை மோசமடைந்து போய், மயக்கமடைந்த சம்பவங்கள் எத்தனையோ இருக்கின்றன.

இவ்வாறான பிரச்சினைகளினூடாக, உண்ணாவிரதப் போராட்டங்களைத் தமிழ் அரசியற் கைதிகள் மேற்கொண்ட போதும் - அதற்கு அரசிடம் இருந்து எத்தகைய பதில்கள் கிடைத்திருக்கின்றன?

தமிழ் அரசியற் கைதிகளின் போராட்டத்துக்கு, அரசாங்கம் மதிப்பளித்து நடந்திருக்குமாயின், இன்றைய போராட்டத்துக்கு அவசியமில்லாமல் போயிருக்கும்.

தமிழ் அரசியற் கைதிகளை, எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் இல்லாமற் தடுத்து வைத்திருக்கும் கொடூரம் இன்னமும் தணிந்தபாடில்லை. யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து பதினேழு மாதங்கள் கடந்துவிட்ட போதும் - சிறுசிறு குற்றசாட்டுக்களின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் நிலைதான் படுபரிதாபகரமானது.

இவர்களின் விடுதலைக்காக, தமிழ் அரசியல்வாதிகள் போதிய அக்கறை கொள்ளவில்லை என்ற குறை, அரசியற் கைதிகள் மத்தியில் நிறையவே இருக்கின்றன.

தாம் போராட்டம் நடத்துகின்ற போதெல்லாம் , கைதிகளின் விடுதலைக்கு உதவி செய்வதாகக் கூறி, வாக்குறுதி வழங்கும் அரசியல்வாதிகள் பின்னர், தங்களைக் கைவிட்டுவிட்டதாக இவர்கள் குறைப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசியற்கைதிகளின் நிலை குறித்து இப்போது பெரிதாக எவரும் பேசுவதில்லை. அவ்வப்போது போராட்டம் நடத்தினால்தான், இன்னும் தமிழ் அரசியற் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற செய்தி தெரியவருகிறது.

தமிழ் அரசியற் கைதிகளும், தமது விடுதலையைத் துரிதப்படுத்த வேறு வழியில்லாது தமது உடலை உருக்கி இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால், இதன் பயன் என்னவோ பூச்சியமாகவே இருந்து வருகிறது.

இந்த விடயத்தில் -கைதிகளைப் பொறுத்த வரையில், அவர்களின் நிலையைப் போன்ற பரிதாபகரமான நிலை, வேறேதும் இருக்க முடியாது.

ஏனென்றால், எட்டுப் பத்து வருடங்களாக சிறையில் உள்ளவர்கள் என்ற பட்டியல் நீளமானது. அண்மையில், கூட பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர், கைதான ஒருவர் விடுதலையாகி தமது குடும்பத்தினருடன் இணைந்திருந்தார்.

இவ்வாறு - நீண்டகால இடைவெளிகளை, குடும்பத்திலிருந்து பிரிந்து அனுபவிக்க வேண்டியவர்களாக இந்தக் கைதிகள் இருக்கின்றனர். இதனால், இவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பாதிப்புக்கள் கொஞ்சநஞ்சமாக இருக்க முடியாது.

இவ்வாறான, சிக்கல் நிறைந்த சூழ்நிலைக்குள் தமது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டவர்களாகவே, இந்த அரசியற்கைதிகள் வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்படுவது எப்போது? மீளவும் தமது குடும்பத்தினருடன் இணைந்து கொள்வது எப்போது? இதற்குத் தடையாக இருக்கும் விடயங்கள் தகர்க்க வேண்டிய கடமைப்பொறுப்பிலிருந்து சம்பந்தப்பட்டவர்கள் ஒருபோதும் விலகக்கூடாது.

இவ்வாறு விலகுவதும் - அரசு பாராமுகமாக இருப்பதும், தமிழ் அரசியற்கைதிகளின் எதிர்காலத்தையே சூனியமாக்குவதாகவே அமைந்துவிடும்.

# இலங்கை கடலில் வெளிநாட்டு மீனவர் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்க முடியாது!

## அமைச்சர் மகிந்த விஜேசேகர கூறுகிறார்

இலங்கை கடற்பகுதியில் - எந்தவொரு வெளிநாட்டு மீனவரும் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று, கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

முதலீட்டுச் சபைத் திட்டங்களின் கீழ், குறிப்பிட்ட சில வெளிநாட்டுக் கப்பல்களுக்கே இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், அக்கப்பல்களும், குறித்த இலட்சினை இடப்பட்டதாக இருக்கும் என்றும், அமைச்சர் மகிந்த விஜேசேகர குறிப்பிட்டார்.

வடபகுதியில் வெளிநாட்டு மீனவர்கள் மீன்பிடித்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்பகுதியில் இதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன என்றும், அமைச்சர் மகிந்த விஜேசேகர மேலும் தெரிவித்தார்.

## பொலிஸாரை தாக்கியமைக்காக மேஜரும், இன்ஸ்பெக்டரும் கைது!

இரண்டு பொலிஸ் கொன்ஸ்டபிள்களைத் தாக்கிய இராணுவ மேஜர் ஒருவரையும், பொலிஸ் இன்ஸ்பெக்டரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காலி முகத்திடலில் மதுபோதையிலிருந்த இவர்களை தடுத்துநிறுத்திய இரண்டு பொலிஸாரையும் - இராணுவ மேஜரும், பொலிஸ் இன்ஸ்பெக்டரும் தாக்கினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து, இவர்கள் இருவரையும், வாகனச் சாரதியையும் கைதுசெய்த பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

## கம்பனிப் பதிவுகள் இவ்வருடம் அதிகரிப்பு

இந்தவருடம் முதல் ஆறு மாதங்களில், இலங்கையில் புதிய கம்பனிகளைப் பதிவுசெய்வது கணிசமாக அதிகரித்துள்ளதாக, கம்பனிப் பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஆறுமாத காலப்பகுதியில் மட்டும் 1778 உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டன. கடந்த வருடத்தைவிட, இது 35 சதவீத அதிகரிப்பு என்றும் கம்பனிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

*கட்சி அனுமதியின்றி இந்திய பயணம்*

## ஐந்து மாகாணசபை உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்புரிமை நீக்கம்!

(கொழும்பு)

கட்சியின் அனுமதியின்றி இந்தியாவுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டதற்காக, தென்மாகாணசபை உறுப்பினர்கள் ஐந்து பேரை ஐக்கியதேசிய கட்சி உறுப்பினர்கள் பதவியில் இருந்து நீக்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உடனடியாக செல்லுபடியாகும் வகையில் இந்த முடிவை எடுத்துள்ளது.

லால் சந்திர, பேவி வீரசிங்க, சிறிவிஜய விக்கிரம, கபில வெல்லப்புவ, பியதாஸ அபேவிக்கிரம ஆகிய மாகாணசபை உறுப்பினர்களையே ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியுள்ளது என, கட்சியின் பொதுச்செயலாளர் சென‌ரத் கப்புகொட்டுவ தெரிவித்தார்.

## அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படம் இலங்கையிலும் படப்பிடிப்பு!

அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் "மதர் தெரேசா ஒவ் கல்கத்தா" **(Mother Teresa of Calcutta)** என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது - இலங்கையில்இடம்பெற்றுவருகிறது.

இந்தத் திரைப்படத்தை - இத்தாலிய நிறுவனம் ஒன்று தயாரிக்கின்றது. இத்தாலிய பிரப்ல இயக்குநரான சேர்ஜியோ கோஸ்ரா என்பவரின் இயக்கத்தில் உருவாகும் இத்திரைப் படத்தில், முன்னணி நடிகையான ஒலிவியா ஹூசே பிரதான பாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்தத் திரைபடத்தில் தயாரிப்பு பங்காளரான இலங்கையர் சந்திரன் ரத்னம் இது குறித்து தெரிவித்தபோது, எண்பது உள்ளூர் தொழில்நுட்பக் கலைஞர்களின் உதவியுடன் படப்பிடிப்பு இடம்பெறுவதாகவும், இத்திரைப்படம் இவ்வருடம் உலகம் முழுவதும் திரையிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு தர பிரான்ஸ் இணக்கம்!

தமிழீழ விடுதலைப் புலிகள்- இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளதாக, 'த ஹிந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகளுக்குத் தேவையான வசதிகளை மாத்திரமே, பிரான்ஸ் வழங்கவுள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சரை மேற்கோள்காட்டி அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடைபெறவுள்ளதாக வெளியான செய்தியை தாம் நிராகரிப்பதாக, பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறான பேச்சுவார்த்தையைத் தங்களால் ஏற்பாடு செய்ய முடியுமென்றும், அரசாங்கம் எந்தவித மறுப்பும் தெரிவிக்காது எனத் தாம் நம்புவதாகவும், அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையை பிரான்ஸில் நடத்த விடுதலைப் புலிகளோ, இலங்கை அரசாங்கமோ இதுவரை தம்மிடம் எந்தவித வேண்டுகோளையும் விடுக்கவில்லை என்றும், அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மோதிய வாகனத்தை அடையாளப்படுத்தினால் விசாரணைகளை நடத்துவது சுலபமாகும்!

## யாழ்.பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துச் சம்பவங்களில் காயமடைபவர்கள் தம்மீது மோதிய வாகனத்தை அடையாளப்படுத்தி வைத்திருத்தலே, விபத்து நடைபெற்றது பற்றி சரியானமுறையில் விசாரணை செய்யமுடியுமென பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து பொலிஸார் மேலும் தகவல் தருகையில்,

விபத்து இடம்பெறும் சந்தர்ப்பங்களில் மோதிய வாகனத்தின் இலக்கம் அல்லது வேறு அடையாளங்களை இனங்கண்டு வைத்தாலே, பொலிஸார் விபத்து பற்றி, பூரணமாக விசாரணை செய்ய இலகுவாக இருக்கும். அண்மைக்காலமாக வீதியால் செல்வோரை வேகமாக வரும் வாகனங்கள் மோதிவிட்டு, தலைமறைவாகிச் சென்றுள்ளன. இதன் காரணமாகவே பொலிஸார் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் - யாழ்.நகரத்தில் ஒருவழிப்பாதை என அறிவிக்கப்பட்ட கே.கே.எஸ் வீதி, கஸ்தூரியார் வீதி என்பனவற்றின் ஊடாக போக்குவரத்து நடைமுறைகளை மீறிப் பயணிப்போர் விபத்துக்குள்ளானால், அவர்கள் காப்புறுதிப் பணத்தையோ அல்லது நட்டஈட்டினையோ பெறமுடியாதெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஒருவழிப்பாதையாக அறிவிக்கப்பட்ட வீதிகளில் - மக்கள் தொடர்ந்தும் இருவழிப் பயணம் செய்து வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ரா)

## ஊனமுற்றோர் கொடிவாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரின் கொடிவாரம் - இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வன்னிப் பிரதேசமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி அரச செயலகத்தில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் மேற்படி கொடிவாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக, கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க இணைப்பாளர் ம.அன்ரன் தெரிவித்துள்ளார். (122)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.90 | 92.30 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.50 | 157.24 |
| 1 யூரோ | 109.38 | 111.02 |
| 1 சுவிஸ் பிராங் | 71.40 | 72.64 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.74 | 63.75 |
| 1 ஜப்பானிய யென் | 0.80 | 0.81 |
| 1 சவூதி றியால் | 25.00 | 90.00 |

# போர்க் கூச்சல் போடுபவர்கள் வரலாற்றுப் பழியைச் சுமப்பர்!

**கனடாவிலிருந்து வெளிவரும் 'நம்நாடு' பத்திரிகையில் கடந்த முதலாம் திகதிய இதழின் ஆசிரிய தலையங்கம் இது.**

முஸ்லிம்களுக்குத் தனி அலகு ஹக்கீம் தலைமையில் தூதுக் குழுக்கள் பிரதமர் மாளிகைக்கும், ஜனாதிபதி மாளிகைக்கும் தாளிதம் செய்து பறந்திருக்கிறார்கள்.

மொழியால் ஒன்றானவர்கள் என்பதால், 'உளியால் செதுக்காமல் ஒற்றுமையாய் செதுக்குவோம்' என்ற விடுதலைப் புலிகளின் அழைப்பை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், கக்கத்துள் வைத்துத் தனி அலகுக் கோரிக்கையை வாரி இறைத்திருக்கிறார்.

முஸ்லிம்களுக்குத் தனி அலகுக் கோரிக்கை - கலகக் கண் கொண்டு, பார்ப்போருக்கு அவலாக விழுகிறது.

வரவேற்றிருக்கிறார் சந்திரிகா-சிரம் மேற்கொண்டு சந்திப்பாளர்களை சரிபோட்டு அனுப்பியிருக்கிறார் சந்திரிகா. குழப்பன்காசி ஜே.வி.பி என்ன சும்மாவா? சந்திப்பு இல்லாமலே அலகுக்கு அலகால் ஆமாப் போட்டு இருக்கிறது ஜே.வி.பி.

பிரதமரின் இல்லத்தில் நோர்வேயின் முன்னாள், இலங்கையிலிருக்கும் தூதுவராக இருந்த வெஸ்பேர்க், இந்நாளின் புதிய கொழும்புக்கான தூதுவர் உடனிருக்க, அலகைக் கொடுத்து கலக நாஸ்தி கொடுத்திருக்கும் ஹக்கீம் குழுவினரின் சந்திப்பு, சில அழுத்தங்களைக் கொடுக்கிறது.

அலகு வருமோ? வராதோ? கலகம் வந்து, சமாதானம் மயானம் போனால் சரி என்பதே இவர்கள் நிலை.

சரியாகப் பயன்படுத்தியிருக்கின்றன சன்னதக் கூட்டங்கள். அலகுக்கு முன்மொழிந்தவர் சந்திரிகா, வழி மொழிந்திருக்கிறது ஜே.வி.பி. முஸ்தபா காலத்திலிருந்து - தமிழரசுக்கட்சியின் அலங்காரத் தமிழ்ப் பேச்சாளர் மசூர் மௌலானாவில்



சந்திரிகா

இருந்து பிரித்தாளும் தந்திரமும், முறித்தாளும் மந்திரமும் - இஸ்லாமியச சகோதரர்களிடையே அச்சொட்டாக விதைப்பதில், சிங்கள இன ஆதிக்கம் மிச்சமில்லாமல் பாராட்டுப் பெறுகிறது.

முஸ்லிம் ஊர்காவற்படைகளைப் புகுத்தி, தமிழ் இனக் கலவரங்களை வகுத்துக்கொள்வதில், சிங்கள இனவாதிக்க வெறியாளர்கள் குறிபார்த்துச் சுட்டார்கள். ஊர்காவற்படையாக வரித்த முஸ்லிம் இளைஞர்களை, ஊர் இரண்டு படுவதற்குப் பயன்படுத்திக் கொண்டதை, சமீபத்திய வருடங்களைத் திரும்பிப் பார்த்தாலே, திருப்பம் தெரிந்துவிடும்.

இந்த அலகு அரசியலுக்கு அடுத்த பக்கத்தில் சிஹல உறுமயவின், உறுமல்கள் அகலக்கால் விரிக்கின்றன.

வடக்குப் புலிகளுக்கு, தெற்கு வெள்ளையனுக்கு என்ற காட்டுக் கூச்சல் அலைமோதும் தலைநகரில் இருந்து, மலைநகர் கண்டிவரை ஆர்ப்பாட்டம் போட்டுக் காட்ட அரங்கம் வருகிறது சிஹல உறுமய.

இதை நீங்கள் வாசிக்கும் சம நேரம், இந்த சிஹல உறுமய அகல வாய் திறந்திருக்கும். ஆர்ப்பாட்டக் காட்சிகள் ஊடகங்களில் எடுத்து வரப்பட்டிருக்கும்.

சமாதானத்தின் நிதானத்தை வெகு சுதந்திரமாகப் பற்றியிருக்கும் இலங்கையின் மகா சனங்கள், யாழ்ப்பாணத்திலிருந்து பல வருடங்களுக்குப் பிறகு சென்ற கதிர்காம பாத யாத்திரைப் பக்தர்கள் - கதிர்காம ரத யாத்திரையில் தங்களை இணைத்துக்கொண்ட செய்திகள் வருகின்ற நேரம் இது.

வனவிலங்கு இலாகாக்களுக்கு ஊடாக இந்தப் பாதயாத்திரை கதிர்காமம் வந்திருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியில் கிழக்கு மாகாண காட்டு எல்லைகளில் விறகுத்தடி பொறுக்கச் சென்றவர்கள் கூட, எலும்பும் தடியுமாக வந்த கதை இன்னமும் பார்வையில் இருந்து பறந்துவிடவில்லை.

பால் வாங்கப் பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்ற வயோதிபர்கள்கூட, காட்டுக்குள் கண்ட துண்டமாக்கிய - பிணவாடைச் சந்திரிகா ஆட்சி கணமேனும் மறந்துபோகவில்லை.

தமிழ் இயக்கங்களிலிருந்து உருவாகிய, பேய்களை வைத்து தமிழினத்துக்குள்ளேயே காய்களை நகர்த்திய சந்திரிகா காலத்து அரசபடை இன்னமும் கிழக்கில் உரசிக் கொண்டிருக்கும் இனவாத முரசின் அடையாளங்களாகக் கனக்கின்றன. உலங்கு வானூர்தியில் கிழக்கில் கால் வைத்த புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்-சகலமட்டப் பிரச்சினைகளின் அடையாளங்களை உள்வாங்கி, வன்னி மீண்டுள்ளார்.

உலக வரலாற்றில் போரில் தூள் கிளப்பவும், போர் நிறுத்தத்தில் புத்தகமாகவும் தன்னை அடையாளப்படுத்தி, வெளிநாடுகளை வியக்க வைத்த விடுதலைப் புலிகள் உண்மையான சமாதானத்தின் அடையாளங்களாகத் தீர்வுகளின் பக்கங்களைத் திருத்திக் கொடுத்து வருகிறார்கள்.

அரசின் நகர்விலிருந்து. சந்திரிகாவின் சன்னதத்தில் மலியும் பல சவால்களுக்கு முகங்கொடுத்து, கப்பல் அழிப்பில் இழக்க முடியாதவர்களை இழந்து, கொடுக்கப்பட்ட போர்நிறுத்தத்தை - விடுக்கப்பட்ட சவாலாகப் பணிந்து, துணிந்து நிற்கும் விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு வந்தபடி பேசுவதில் கூச்சமில்லாமல் கொழும்பு இருக்கிறது.

சந்திரிகா, வீரவன்சா, சிஹல உறுமய என மக்களை இனவாதத்



விமல் வீரவன்ச

தில் இழுத்து எடுத்து அழுத்தம் கொடுக்கும் ஆட்சிப் பல்லக்குத் தத்துவம் மொத்தி மொத்தி முழவடிக்கிறது.

இதுவெல்லாவற்றிற்கும் பழகிப்போன விடுதலைப் புலிகள் - சமாதானத்தின் பக்கங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

போர்க் கூச்சல் போட்டு, புலிப் பாய்ச்சல் தேடுபவர்கள் கவனிக்க-

இந்தச் சமாதானப் பேருந்தைச் சரிபார்க்காவிட்டால், வரலாற்றுப் பழியை வரவேருங்கள்.

இந்த நாட்கள் சமாதானத்தின் சத்திய நாட்கள்.

# தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழும்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஜப்பானிய அமைச்சருக்கு மகஜர்

சமாதானப் பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு, இலங்கையில் வாழும் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய - ஏனைய இன மக்களைப்போல், சம அந்தஸ்துடன் கூடிய சமாதான சகவாழ்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று -

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் - கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழப்பாணம் வந்த ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெட்சுரோ யானோவிடம் கையளித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கை சுதந்திரம் அடைந்து, அந்தச் சுதந்திரத்தை - தமிழ்மக்கள் அனுபவித்தார்களா? இல்லை. பெரும்பான்மை இனமாகிய சிங்களமக்கள்- தமிழ்மக்களுக்குரிய உரிமையைக் கொடுக்காமல் தமிழ்மக்களை - இலங்கையின் சிறுபான்மை இனமாகக் கருதி, கொடுக்கப்படவேண்டிய உரிமைகளை கொடுக்காமல் காலத்தைக் கடத்தி வருகின்றார்கள்.

எமது தமிழ் அரசியல் தலைவர்கள் - சிங்கள அரசியல்வாதிகளோடு, எமது உரிமைக்காகப் போராடி, கண்டமுடிவு பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தமுடியாமல், சிங்கள இனவாதிகளால் அந்த ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது.

தொடர்ந்தும் தமிழ்மக்கள் ஏமாறத் தயாராக இல்லை என்ற முடிவில் தர்மயுத்தம் ஆரம்பமானது. தமிழீழ விடுதலைப் புலிகள் - தமிழ் மக்களின் தலைவன் வே.பிரபாகரன் தலைமையில், தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் தன்னாட்சி புரிவதற்கு - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த விடுதலைப் புலிப்போராளிகள், தமிழ் மக்களின் உரிமைக்காகப் பெறுமதிமிக்க உயிர்த் தியாகம் புரிந்தனர், இராணுவத்திற்குச் சமபலத்துடன் சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்துடன், அரசியற்தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டது.

இதன் பலன் - பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் நிலவுகின்றது. ஆனால், யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்தமண்ணில், சொந்த வீட்டில் மீளக்குடியமர முடிந்ததா?

தங்கள் மத வழிபாட்டுக்காக ஆலயங்களுக்குச் சென்று, சுதந்திரமாக வழிபட முடிகின்றதா? உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில், தமிழ் மக்களின் வீடுகள் - இராணுவ முகாமாக மாறியுள்ள இன்றைய நிலை.

இந்தச் சமாதானம் நிரந்தர சமாதானமாக மாறி, மக்களின் இயல்பு வாழ்க்கை சிறப்படையவேண்டும். தமது சொந்தமண்ணில் மீளக்குடியமர வேண்டும். இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் - இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை பல நாடுகளில், பல சுற்றுப் பேச்சுவார்த்தையாக நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது, முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதா? இல்லை.

எனவே, தொடர்ந்தும் பேச்சுவார்த்தை பேசி என்ன பயன்? எனவேதான், விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தினார்கள்.

இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டு, மக்கள் சமாதானத்துடன் சுபீட்சமாக வாழ, சர்வதேச நாடுகள் நிதியுதவிகள் வழங்க முன்வந்த நிலையில், அந்தநிதி வட - கிழக்கு மக்களுக்கு நீதியாகவும், நியாயமாகவும் கிடைத்துப் பலன்பெறவேண்டுமானால், தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான - தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால அரசை ஒப்படைத்து, அவர்கள் மூலம் புனர்வாழ்வு, புனரமைப்புச் செய்வதையே தமிழ்மக்கள் விரும்புகின்றனர்.

தமிழர்கள் இலங்கையில் சம அந்தஸ்துடன் வாழவேண்டுமென்பதற்காக, பல வழிகளில் போராடுகின்றார்கள். தென்னிலங்கைச் சிங்கள மக்களும் இந்நிலையை உணர்ந்துள்ளனர்.

சில இனவாத அரசியற்கட்சிகள், தமது அரசியல் இலாபங்களில், தமிழர்களுக்கு உரிமைகள் கொடுக்கக் கூடாது என்று, பல வழிகளில் முனைகின்றார்கள், என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கணக்கீட்டுத் தொழில்நுட்ப பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்!

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் (ஏ.ஏ.ரி.) பரீட்சைகள், இவ்வருடம் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் நடாத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடாத்தப்படும் பரீட்சைகளில், ஜூன் மாதம் நடைபெறவுள்ள பரீட்சை - கொழும்பிலும், டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகள் - யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளன.

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த ஆண் - பெண் இருபாலாரும் இப்பரீட்சைக்குத் தோற்றமுடியும் எனவும், பரீட்சைகள் மூன்று மொழிகளிலும் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான பதிவுத் திகதி, எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 8

### பிற்றக்கோஸிஸ், ஓணித்தோஸிஸ்

கிளி, காதல் பறவை என்பனவற்றின் மலத்திலிருக்கும் கிளமீடியாக்களினால் பிற்றக்கோஸிஸ் (**PITACOSIS**) என்ற நோயும், கோழிகளின் மலத்தில் காணப்படும் கிளமீடியாக்களினால், ஓணித்தோஸிஸ் (**ORNITHOSIS**) என்ற நோயும் உண்டாகும். இப்பறவைகளின் மலம் உலர்ந்து தூளாகிக் காற்றில் கலக்கும்போதும், இந்தப் பறவைகளைக் கொஞ்சும்போது, அவற்றின் இறக்கைகளில் ஒட்டியிருக்கும் கிளமீடியாக்கள் - எமது சுவாசப்பையை அடைந்து, இந்த நோய்களை உண்டாக்கும். காய்ச்சல், தலையிடி, கை, கால் உழைச்சல், களைப்பு, சோம்பல், இருமல் போன்ற குணங்குறிகள் ஏற்பட்டு, நுரையீரலில் அழற்சி ஏற்படும்.

பறவைகளின் மலங்களைக் குறிப்பாகக் காதல் பறவைகளின் கூடுகளிலுள்ள மலத்தைச் சுத்திகரிக்கும்போது, முகமூடி (**MASK**) அணிவதாலும், காதல் பறவைகள் வளர்ப்பதைத் தவிர்ப்பதாலும், இந்தநோய் ஏற்படாது தடுக்கலாம்.

காதல் பறவைகள் வளர்க்கும் வீட்டில் வசிப்போருக்குத் தொய்வு நோய் ஏற்படுவதுடன், அவற்றின் தொடர் ஒலியால் காது கேட்கும் திறன் குறைவும், ஏனையோரிடம் எரிந்துவிழும் சுபாவம் போன்றனவும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

எனவே, இந்தப் பறவைகளை வீடுகளில் வளர்ப்பதைத் தவிர்த்தல் நன்று.

### மடி வீக்கம் (MASTITIES)

பல்வேறு நுண்ணங்கிகளின் தொற்றினால், ஆடு, மாடுகளின் மடி வீக்கமடையும், காய்ச்சல் காயும். பாலில் கட்டிகள் காணப்படும். பாலின் நிறம் மாறியிருக்கும்.

இந்த நோயை ஏற்படுத்தும் பற்றீரியாக்களுள் - காசநோயை ஏற்படுத்தும் பற்றீரியாவும் வாதக் காய்ச்சலை (**RHEUMATIC FEVER**) ஏற்படுத்தி, மூட்டுக்களை வீங்க வைத்து, மனிதரின் இதயத்தின் வால்வுகளைச் சேதப்படுத்தும் பற்றீரியாவும் அடங்கும்.

எனவே, பால் கறக்கும் ஒவ்வொரு தடவையும் மாட்டிற்கு அல்லது ஆட்டிற்கு மடிவீக்க நோய் அறிகுறி ஏதாவது இருக்கிறதா என ஆராய்வது அவசியமாகும்.

இதனை ஆரம்பத்தில் கண்டுபிடிப்பதற்குப் பிரகாசமான உட்பாகத்தைக் கொண்டுள்ள (எவர் சில்வர்) கோப்பை ஒன்றின் மேல் ஓர் வடியை வைத்து, ஒவ்வொரு முலைக்காம்பிலும் தனித்தனியாகப் பாலைக் கறந்து, கட்டிகள் ஏதாவது வடியில் இருக்கிறதா? பாலின் நிறம் மாறுபட்டுள்ளதா? என ஆராயவேண்டும்.

பாலின் நிறம் மாறியிருந்தால் அல்லது வடியில் கட்டிகள் தங்கியிருந்தால், அந்தக் கால்நடையின் பாலைப் பயன்படுத்தக்கூடாது. உடனடியாக மிருக வைத்தியருடன்தொடர்புகொள்ள வேண்டும்.

இதற்கு முலைக்காம்பின் பால்த் துவாரத்தின் ஊடாக ஊசி மருந்தைச் செலுத்தி, சிகிச்சையளிப்பது சாதாரண நடைமுறையாகும்.

ஆனால், நா ஊறினால் மடி வீங்குகிறது என்ற தப்பெண்ணம், மக்கள் மனதில் வேரூன்றியுள்ளது.

இதனால், இவர்கள் மிருகவைத்தியரை நாடுவது இல்லை. இத்தப் பெண்ணம் நீக்கப்படாவிட்டால், பாதிக்கப்பட்ட கால்நடையிலிருந்து எதிர்காலத்தில் பால் கறக்கமுடியாது போவதுடன், இந்த நோயை ஏற்படுத்திய நுண்ணங்கிகள் - மனிதரில் தொண்டை அழற்சி, மூட்டுவீக்கம், இருதய வால்வு செயலிழப்புப் போன்ற நோய்களையும் மனிதருக்கு ஏற்படுத்திவிடும்.

ச.ஆ.கோபாலமூர்த்தி

(தொடரும்.....)

# இராணுவவேலி அமைப்பதைத் தடுத்த 40 பேர் இஸ்ரேலிய பொலிஸால் கைது!



## வெளிநாட்டவர்களும் அடங்குகின்றனர்

மேற்குக்கரையில், பாதுகாப்புவேலி அமைக்கும் இஸ்ரேலின் முயற்சியைத் தடைசெய்ய முயன்ற நாற்பது பேர், இஸ்ரேலியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்குக்கரையில் பாதுகாப்பு வேலிகள் அமைத்தால், இஸ்ரேலுக்கான கடன் உதவிகள் குறைக்கப்படும் என்று, அமெரிக்க அதிகாரிகள் அறிவித்த மறுதினமே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் - இஸ்ரேலுக்குள் ஊடுருவுவதைத் தடுக்க, இவ்வேலிகள் அவசியம் என்று, இஸ்ரேல் கூறுகின்ற அதேவேளை - ஒரு இருபக்க எல்லையை வரையறுக்க இஸ்ரேல் முனைவதாக இதை எதிர்ப்பவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எதிர்ப்பு நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்டவர்களில், சர்வதேச தொழிலாளர் இயக்கம் சார்ந்த வெளிநாட்டவரும் அடங்குகின்றனர். இவர்களை நாடுகடத்துவது பற்றி, பொலிஸார் ஆலோசித்து வருகின்றனர்.

இதேவேளை - இந்த 600 கிலோமீற்றர் நீளமான பாதுகாப்பு வேலி, யூதக் குடியேற்றம் நிறுவுவது தொடர்பானதாக இருக்குமோ என்று அமெரிக்க அதிகாரிகள் சிந்திப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிலிப்பைன்ஸ் கிளர்ச்சித் தலைவர் உயிழப்பு!

பிலிப்பைன்ஸின் பிரதான தீவிரவாதக் குழுவான 'மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி'யின் (MILF) தலைவர் சலாமத், இருதய நோய் காரணமாக இரண்டு வாரங்களுக்கு முன் உயிரிழந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

பேச்சுவார்த்தைகள் குழம்பிவிடக் கூடாது என்பதற்காக இந்தச் செய்தி சிறிது தாமதமாகவே கசிய விடப்பட்டிருக்கிறது.

உலகவலம்

# விட்டுக்கொடுப்புகளின் மூலம் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு!

## பாகிஸ்தான் பிரதமர் ஸபருல்லா ஜலாமி கூறுகிறார்



(இஸ்லாமாபாத்)


இந்தியாவும் பாகிஸ்தானும், பரஸ்பரம் விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்வதன் மூலம், நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருக்கும் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியுமென்று, பாகிஸ்தானிய பிரதம மந்திரி ஸபரூல்லா ஜமாலி கருத்துக் கூறியுள்ளார்.

ஆனால், காஷ்மீரின் பெரும் பகுதியை, இந்தியா தன் ஆதிக்கத்தில் வைத்திருப்பதாகவும், பெரிய நாடாகவும், பலங்கூடிய நாடாகவும் இந்தியா இருப்பதால், இந்தியாவே கூடுதல் விட்டுக்கொடுப்புக்களைச் செய்யவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அணுவாயுத பலங்கொண்ட இரண்டு நாடுகளும் மீண்டும் இராஜதந்திர உறவுகளை மேற்கொண்டதானது, பாரிய திருப்புமுனை என்று கூறிய அவர்,

பேச்சுவார்த்தை - சுதந்திரமான முடிவுகளைக் கொண்டுவரும் என்றுதான் நம்புவதாகவும் -

அத்தோடு, இந்தியப் பிரதமர் பொறுமை வாய்ந்த அரசியல்வாதியாக இருப்பது, நம்பிக்கைக்கு வலுவூட்டுவதாகவும் தெரிவித்தார்.



இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள ஆடம்பர ஹொட்டேலுக்கு முன்பாக நிகழ்த்தப்பட்ட கார்க் குண்டுவெடிப்பால் ஏற்பட்ட தீயை அணைக்க, தீய்ணைப்புப் படையினர் போராடுகின்றனர். இத்தாக்குதலில் 10 பேர் பலியாகியிருந்தனர்.

# ஆப்கான் தேர்தல் ஆணைக்குழு தனது பணிகளை ஆரம்பித்தது!

ஆப்கானில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் நிர்ணய ஆணைக் குழு, ஆப்கானிஸ்தானில் நடைபெறப்போகும் சுதந்திரமான தேர்தல் பணிகள் தொடர்பான தன் கடமைகளை ஆரம்பித்தது.

ஆப்கானிஸ்தானுக்கு உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பது தொடர்பில், தேர்தல் கமிஷனின் ஆறு அங்கத்தவர்கள், ஆப்கானிஸ்தானுக்கான விசேட ஐ.நா. தூதுவரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்த இடைக்கால தேர்தல் கமிஷன் - மில்லியன் கணக்கான வாக்காளர்களைப் பதிவுசெய்ய வேண்டிய முக்கிய கடமையைக் கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் - சுதந்திரமானதொரு தேர்தல், முதன்முறையாக நடைபெறப்போவதால், இது ஒரு சவாலாகவே தேர்தல் கமிஷனுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்காளர் பதிவுகளைக் கண்காணிக்கும் பாரிய பொறுப்பை, ஐ.நா. சபை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தத் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற, சகலதரப்புகளும் முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளை, தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்சிகளை அமைப்பதில், வெவ்வேறு தரப்பினர் ஆர்வம் காட்டிவருவதாகத் தெரியவருகிறது.



சீனாவின் தலைநகர் பீகிங்கில், முச்சக்கர வண்டியில் பயணிக்கும் ஒரு குடும்பத்தையே படத்தில் காண்கிறீர்கள். பீகிங்கில் மோட்டார் வாகனங்களின் தொகை, இரண்டு மில்லியனைத் தாண்டிவிட்ட நிலையில், சைக்கிள்களும் துவிச்சக்கர வண்டிகளுமே பிரபலமாகியுள்ளன.

# முடக்கப்பட்டிருக்கும் நிதியை மீளளிக்க ஈராக் கோரிக்கை!

(பக்தாத்)

அமெரிக்காவால் முடக்கிவைக்கப்பட்டுள்ள ஈராக்கிய அரசு மற்றும் தனியாரின் பெருந்தொகைப் பணத்தை, ஈராக்கின் புனரமைப்பு மற்றும் மனிதாபிமானத் தேவைகள் கருதி, மீண்டும் ஈராக்கிற்குத் தரவேண்டுமென்று, ஈராக்கிய மத்திய வங்கியின் அதிகாரியொருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்துக்கமைய, அமெரிக்காவில் முடக்கப்பட்டுள்ள 1.7 பில்லியன் டொலர்களும், வேறு நாடுகளில் முடக்கப்பட்டுள்ள 600 மில்லியன் டொலர்களும் உடனடியாக ஈராக்கிற்கு மாற்றப்படவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஊடாகப் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் - மனிதாபிமானத் தேவைகள், புனரமைப்பு, சிவில் நிர்வாகம் இன்னும் வேறு தேவைகள் கருதி, உடனடியாக - இந்தப் பணம் தேவைப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணம் திரும்பக் கிடைக்குமாயின், ஈராக்கிய மத்திய வங்கியில் அமைக்கப்பட்டுள்ள ஈராக்கிற்கான அபிவிருத்தி நிதியக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு - அமெரிக்க, பிரித்தானிய அதிகாரிகளால் நெறிப்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.



சீனாவின் குவாங்டுங் மாகாணத்தில், கிளர்ச்சித் தடுப்பு நடவடிக்கைப் பொலிஸார் நடத்தும் அணிவகுப்பைப் படத்தில் காணலாம்.

# நிதி விவகாரங்களில் பெனாசீர் குற்றமிழைத்ததாக தீர்ப்பளிப்பு!

(சூரிச்)

முன்னாள் பாகிஸ்தானியப் பிரதமர் பெனாசிர் பூட்டோ மற்றும் அவருடைய கணவர் அசீப் சர்தர்ஜி இருவருமே, நிதி விவகாரங்களில் குற்றமிழைத்திருப்பதாக சுவிட்சர்லாந்து நீதிபதியொருவர் தீர்ப்பளித்துள்ளார்.

தீர்ப்பு வழங்கிய நீதிபதி, இருவருக்கும் ஆறுமாதம் ஒத்திவைக்கப்பட்ட சிறைவாசமும், தலா 50,000 டொலர் தண்டமும், மேலும் இரண்டு மில்லியன் டொலர்களைப் பாகிஸ்தானுக்கு மீளளிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இவர்கள் - மில்லியன்கணக்கான டொலர்களை சட்டவிரோதமாகச் சுவிட்சர்லாந்தின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட்டுள்ளதாகவும், இவை பாகிஸ்தானுக்குத் திருப்பிக்கொடுக்கப்படவேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

பெனாசிர் பூட்டோவும் அவரது கணவரும் தம்மீது சுமத்தப்பட்டுள்ள நிதித் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டை மறுத்துள்ளதுடன், தாங்கள் மேன்முறையீடு செய்யப்போவதாகவும் கூறியுள்ளனர்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் நியமனம் வழங்கக்கோரி மறியல்!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட பட்டதாரிகள்- தமக்கு நியமனம் வழங்கக்கோரி மறியல் போராட்டம் ஒன்றை இன்று நடாத்தவுள்ளனர்.

இன்று காலை - கல்முனை அரச செயலகத்தின் முன்பாக, இந்த மறியல் போராட்டத்தை நடாத்த வுள்ளதாக அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த, 98 ஆம் ஆண்டுமுதல் பட்டம்பெற்ற தமக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை. தமக்கு நியமனம் வழங்குமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தும், இன்னமும் நியமனம் வழங்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்த மறியல் போராட்டம் நடாத்தவுள்ளதாக, சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தமக்கு உடனடியாக நியமனம் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி - பிரதமமந்திரி ரணில் விக்கிரம சிங்க, கல்வி அமைச்சர், வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோ ருக்கு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ள தாகவும் தெரியவருகிறது. (07)

# எதிர்க்கட்சி உறுப்பினருக்கு நீதிமன்றம் பிடிவிறாந்து!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன் உட்பட ஐந்துபேரைக் கைதுசெய்வதற்கு, தம்புள்ள நீதிவான் சாலிமா பெரேரா நேற்றுப் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து, ஆயுதமுனையில் அவருடைய உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியமை தொடர்பாக, விசாரணை அறிக்கையைப் பரிசீலித்த பின்னரே நீதிவான் பிடிவிறாந்து பிறப்பித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட இருவர் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றையதினம், அடையாள அணிவகுப்பு நடத்துவதற்குரிய அனுமதியும் நீதிவான் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொதுசன அதிகாரிகளுக்கு எதிராக நாளாந்தம் பத்து முறைப்பாடுகள்!

## மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்- பொதுசன அதிகாரிகளுக்கு எதிராக, நாளாந்தம் பத்து முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன என அரசியல் யாப்பு விவகார அமைச்சின் ஆலோசகரும், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளருமாகிய காலிங்க இந்திரதிஸ்ஸ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

இவ்வாறான 2000 முறைப்பாடுகள், இதுவரையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குக் கிடைத்துள்ளன. பொதுசன அதிகாரிகள்- அரசாங்கக் கொள்கைகளுக்கும், ஆளும் கட்சியிடமுள்ள வித்தியாசத்தை அடையாளம் காணத்தக்க ஆற்றல் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பொதுசன அதிகாரிகளுடைய குறிப்பிட்ட சில தீர்மானங்கள், அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிடக்கூடியன.

சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் அல்லது படைத்தரப்புக் காவலில் இருக்கும்போது, ஒருவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாக தொடரப்படும் வழக்குகளில் ஆஜராகாமல் விடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இவ்வாறான வழக்குகளில், பொதுசன அதிகாரிகள் தமது தனிப்பட்ட நிதியிலிருந்து முறைப்பாட்டாளருக்கு நஷ்டஈடு செலுத்தவேண்டும் என்றும், காலிங்க இந்திரதிஸ்ஸ மேலும் தெரிவித்தார்.

# சிறையில் இருந்தபோது ரத்வத்தைக்கு இயற்கைக்கடன் கழிக்கவும் வசதியில்லை!

## நாடாளுமன்றில் பொ.ஐ.மு. எம்.பி குற்றச்சாட்டு

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு - சிறைச்சாலையில் மலசலம் கழிப்பதற்கு பழைய கதிரை ஒன்றில் துவாரம் போட்டுக் கொடுக்கப்பட்டதாக, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில், அங்கவீனமுற்றவர்களுக்கான உரிமைகள் தொடர்பான பாதுகாப்புத் திருத்தச் சட்டமூல விவாவதத்தில், கலந்துகொண்டு உரையாற்றும் போது, மேற கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாட்டுக்காக அரும்பாடுபட்டவர். யுத்தத்தின் போது, அவரது கால் ஒன்று ஊனமானது. சில குற்றச்சாட்டுக்களின் பேரில், சிறைச்சாலையில் இருந்தபோது அவர் பல துன்பங்களை அனுபவித்தார்.

தீரம்மிக்க வீரராக திகழ்ந்த ரத்வத்தவுக்கு - சிறைச்சாலையில் மலசலம் கழிப்பதற்கு, பழைய கதிரை ஒன்றுக்கு துவாரம் போட்டுக் கொடுககப்பட்டது. கௌரவமான ஒருவர் இவ்வாறு நடத்தப்பட்டார் என்றால், சாதாரண கைதிகள் எவ்வாறு நடத்தப்பட்டிருப்பர் எனவும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், மத்திய வங்கியின் அறிக்கையை, கண்பார்வையற்றவர்களால் வாசிக்க முடியுமா? அவர்களுக்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

அணுகுண்டு வீச்சின் தாக்கத்தினால் - ஜப்பானில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறககின்றனர். இந்த விடயம் குறித்து, அந்நாட்டு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், பீலிக்ஸ் பெரேரா மேலும் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக துணைவேந்தர்களை சந்திரிகா இன்று சந்தித்துப் பேசுவார்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க - பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பல்கலைக்கழகங்களில் தற்போது நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆராயும்பொருட்டே, இந்தச்சந்திப்பு நடைபெறவுள்ளது. கடந்த ஜூன்மாதம் 12 ஆம் திகதி துணைவேந்தர்களுடன், ஜனாதிபதி நடத்திய முதற்சுற்றுப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களில் காணும் முன்னேற்றங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

முதற்சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது - பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து துணைவேந்தர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என்று துணைவேந்தர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

2001 ஆம் ஆண்டு - 48 ஆயிரத்து 752 மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு அனுமதிக்கப்பட்டதாகவும், மாணவர் ஒவ்வொருவருக்கும் 74 ஆயிரத்து 327 ரூபா வீதம் ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடம் - 65 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவிருப்பதாகவும், எனினும் மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் வருடாந்த நிதி 52 ஆயிரத்து 558 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

## பல்கலைக்கழக...

இதனால் சித்த மருத்துவத்துறையின் ஒன்றிய நிர்வாகக் குழுவில், அங்கம் வகித்த மாணவனை அழைப பதற்காக, அனுப்பப்பட்ட வாகனத்தை சித்த மருத்துவத்துறை மாணவர்கள் தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து, மாலை 5 மணியளவில் அங்கு சென்ற முகாமைத்துவக்குழுவினர், அங்கு நின்ற மாணவர்களுடன் வாக்குவாதப்பட்டு வாகனத்தை பலவந்தமாக எடுத்து வந்தனர்.

இது தொடர்பாக, ஆராயும் முகாமைத்துவக்குழுக் கூட்டமொன்று சித்தமருத்துவத்துறையில் இன்று காலை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (39)

## கைதடிச் சந்தியில்...

ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில், புதிய காவலரண்களை அமைப்பதிலும், வீதி ரோந்துக் கடமையை அதிகரிப்பதிலும், அண்மைக்காலமாகப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புவிசார்...

மைப்புகள் எவ்வாறு அங்கு இருக்கின்றன என்று ஆராயவே, இக் குழு இங்கு வருகை தந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்ற இக்குழு, ஆணைக் குழுவின் இணைப்பாளரைச் சந்தித்துள்ளது.

## மடு தேவாலய...

13 ஆம், திகதிகளில் காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு இரவு பத்து மணிக்கு சோதனைச்சாவடி மூடப்படும். 14 ஆம், 15 ஆம் திகதிகளில் 24 மணி நேரமும் சோதனை சாவடி திறந்திருக்கும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மடுத்தேவாலயத்தின் உற்சவத்திற்கு - இம்முறை தென்பகுதியிலிருந்து குறைந்தது நான்கு இலட்சம் மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன என, மடுத் தேவாலய வட்டாரங்கள் தெரிவித்தன.


### திருமறைக் கலாமன்றம் நடத்தும் தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டி

எமது மன்றம் செப்ரெம்பர் மாதம் நடத்தவிருக்கின்ற நாட்டுக்கூத்து விழாவின் ஒரு அம்சமாகவும், பாரம்பரிய கலைகளைப் பேணுகின்ற நடவடிக்கைகளின் ஒரு செயற்பாடாகவும் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

**போட்டிக்கான பரிசுத்தொகை**

1 ஆம் பரிசு - 8,000 ரூபா
2 ஆம் பரிசு - 6,000 ரூபா
3 ஆம் பரிசு - 4,000 ரூபா

**போட்டி விதிகள்**

1. நாட்டுக்கூத்து ஒரு மணிநேரத்துக்குள் அமைந்திருக்க வேண்டும்.
2. பாரம்பரிய பழைய நாட்டுக்கூத்துப் பிரதிகளை ஆற்றுகை செய்தலே விரும்பத்தக்கது. எனினும் புதிய கூத்துக்களைப் படைக்க விரும்புபவர்கள் மரபுவழிக்கூத்தின் கட்டமைப்புக்குள் நின்று படைக்கலாம்.
3. யாழ்.மாவட்டத்திலுள்ள தனி நபர்களும், நிறுவனங்களும் மட்டுமே இப்போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.
4. போட்டிக்கு விண்ணப்பிப்போர் ஆற்றுகை செய்யும் நாட்டுக்கூத்துப் பிரதியை முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும்.
5. போட்டிக்கான இறுதிமுடிவு நடுவர்களுடையதே.
6. திருமறைக்கலாமன்ற அங்கத்தவர்களோ அல்லது அவர்களால் நெறியாள்கை செய்யப்படும் படைப்புக்களோ இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.
7. விண்ணப்ப முடிவுத்திகதி 18.08.2003 திங்கட்கிழமை
8. போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாத முதல்வாரத்தில் நடைபெறும்.

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-*

"தென்மோடி நாட்டுக்கூத்துப்போட்டி"
பொதுச்செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்
*238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

(சி-1321)


# அரும்பொருட்கள் பாதுகாப்பு நடுவகம்...

அமைப்பினை நிறுவி, செயற்பாடுகளைத் தீவிரமாக்கவுள்ளோம்.

கடந்த சில நாட்களாக நான் தென்தமிழீழத்தில் நின்றபோது, பல வரலாற்றுச் சான்றுகளைக் காண முடிந்தது. ஆனால், அந்த வரலாற்றுச் சான்றுகளைப் பேணக்கூடிய சூழல் அங்கிருக்கவில்லை.

எனவே, வரலாற்றுச் சான்றுகளைப் பேணும் மனநிலையை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்த வேணடும். எங்களை ஆக்கிரமித்து நிற்பவர்கள் - தமது வரலாற்றுச் சான்றுகளைப் பேணுவதில் அக்கறையாக உள்ளார்கள்.

திருகோணமலையில் - ஒரு இடத்தில் காலங்காலமாக இருந்த, எங்கள் மக்களின் கோயில் பகுதிகளில் இருந்து- எங்கள் மக்கள் விரட்டப்பட்டு, அந்த இடம் பௌத்த கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. பின்னர், எங்கள் போராளிகளால் அந்தப் பிரதேசம் மீட்கப்பட்டு, மக்களால் மீண்டும் அந்த இடத்தில் பிள்ளையார் ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

உண்மையில் எங்கள் பிரதேசங்களை மீட்டுச்செல்லும் வேளையில், நாங்கள் எங்கள் வரலாற்று ஆவணங்களை ஆவணப்படுத்திக் கொளவதும், பேணிக் கொள்வதும் உயரிய பணியாகும்.

நாம் போராட்டத்தில் எவ்வளவோ அர்ப்பணிப்புடனும், தீவிரமாகவும் செயற்பாடுகளை வகுத்துக் கொண்டு செல்கின்றோமோ, அதே போன்று உரமான உழைப்பினூடே, வரலாற்று ஆவணங்களின் சான்றுகளை பேணுவதிலும் நாங்கள் ஆர்வம்காட்டவேண்டும் என்பதுதான், எங்கள் தேசியத் தலைவரின் பெரு விருப்பமாகும் என்று, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில், அரசியற்துறை தூயவன் அரசறிவியல் கல்லூரி மண்டபத்தில்- தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தலைமையில் தமிழீழ அரும் பொருட்பாதுகாப்பு நடுவ அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இதில், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரையை நிகழ்த்தினார்கள்.

தமிழீழத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் தொல்பொருட்களைப் பாதுகாத்தல், இன்றைய அரும்பொருட்களைப் பாதுகாத்தல், போர்க்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் என்பது இதன் நோக்கமாகும். இதற்கான யாப்பு வரைபுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரும்பொருட்களை அழித்தல், விற்பனைசெய்தல், சட்டவிரோதமாக கணிக்கப்படவுள்ளன.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில்- கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.புஷ்பரத்தினம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சனாதனன், அகிலன், மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜெய சங்கர், உதவி அரசாங்க அதிபர் செயலகங்களின் பண்பாட்டு அலுவலர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள், தமிழீழ காவல்துறையினர், நீதி நிர்வாகத் துறையினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1535 திகதி: 05.08.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P | 1 | 6 | 3 | 6 | 8 | 8 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.